43681

"Kilikgoondu"

443

20 FEB 1954

SCANNED

443
1-54

O-,3NVI,K
N53
105680

கிளிக்கூண்டு

26 FEB 1954

★

தில்லை வில்லாளன்

★

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் — திருச்சிராப்பள்ளி

இரண்டாம் பதிப்பு : 1953

O-,3NVI,K
N53

உரிமையுடையது.

TAMIL NADU ARCHIVES LIBRARY
105680
EGMORE, MADRAS-600 008

விலை ரூ. 1—0—0

சிட்டி பிரஸ், மதுரை ரோடு, திருச்சிராப்பள்ளி.

முன்னுரை

'கிளிக் கூண்டு'—எனது கல்லூரி படிப்பின் பொழுது எழுதப்பட்டது. நான் இதனை யெழுதியபொழுது, பல தோழர்கள் என்னிடம் வந்து விசித்திரமானக் கேள்விகளைக் கேட்டார்கள். கேள்வி கேட்ட பலரில், சில பெண்களும் உண்டு. அவர்கள் வீசிய கேள்விகள் எனக்கு ஆச்சரியத்தைத்தான் தந்தன.

இக் கூண்டிலே, வருகிற கற்பனைப் பாத்திரங்கள் உண்மையில் இருப்பதுபோல என்னிடம் அவர்கள் பேசினார்கள். அதுவும் தீர்மானமான முடிவிலே இருந்தார்கள். நான் எவ்வளவு மறுத்துச் சொன்னாலும், என் வார்த்தைகளை ஏற்கவே மாட்டார்கள் என்பது மட்டும் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. ஆகவே நான் பேசாதிருந்தேன். மௌனம் சம்மதத்தின் அறிகுறி யென்று அவர்கள் எடுத்துக் கொண்டார்கள்.

இக்கூண்டு மட்டுமல்ல, எந்தக் கூண்டை எவர் கட்டினாலும், இத்தகைய சந்தேகம் வர வேண்டும் என்பதே என் ஆசை. அத்தகைய சந்தேகந்தான் கூண்டின் சிறப்பிற்குக் காரணம் என்று கருதுகிறேன். எழுப்பப்படும் கற்பனை எதுவானாலும், உண்மை வாழ்க்கையோடு ஒட்டுவதாக இருக்க வேண்டும். அத்

தகைய கற்பனையைத்தான் நான் வரவேற்பேன். இந்த இலக்கணப்படி, கூண்டு எனக்கு மிகவும் பிடித்தமானது என்று தைரியமாகச் சொல்லிக் கொள்வேன்.

கல்லூரி நாட்களில், வெளியிடப்பட்டு, அதன்மூலம் கல்லூரி மாணவ, மாணவியரிடையிலே ஒரு இன்ப சல சலப்பை ஏற்படுத்திய இந்தக் 'கிளிக்கூண்டை', மீண்டும், நான்கரண்டுகளுக்குப் பிறகு, திருச்சி திராவிடப் பண்ணையார் வெளியிட முன் வந்துள்ளார். அவர்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'அறிவகம்'
சென்னை.

அன்பன்,

தில்லை வில்லாளன்.

கிளிக் கூண்டு

1

வாட்டமே வடிவாக வந்தான் வழுதி. ஏன் என்று புரிய வில்லை. எப்பொழுதுமே சிரித்த முகமும், கலகலப்பான பேச்சும், களங்கமற்ற பார்வையும் கொண்டு என்போன்ற தோழர்களின் இதயத்தில் இடம் பெற்றுள்ள அவனது அன்றைய வழக்கத்திற்கு மாறுன வாடிய முகமும், ஒளி மழுங்கிய கண்களும், சோகத்தால் சுருங்கிய நெற்றியும் ... ... என்னைச் சிந்திக்கத் தூண்டின. இரவும் பகலும் போல, இன்பமும் துன்பமும் மாறிமாறி வரும். ஆனலும் வாடாத மலர் வாடி விட்டது போன்ற உணர்ச்சி என்னை வாட்டியது.

நான் என் அறையின் முன்புறமுள்ள தாழ்வாரத்தில் பச்சை வண்ணம் பூசப்பட்ட அழகிய கைப்பிடிச் சுவரைப் பிடித்துக் கொண்டு நின்றேன். அப்பொழுதுதான் நடு வீதியில் வந்து வழுதியை நான் பார்த்தேன். எப்பொழுதுமே கேலியோடு எதையாவது சொல்லிக்கொண்டு மாடிப்படிகளில் ஏறச் செல்வான். ஆனல் அன்று வாய்மூடி மௌனியாகி விட்டான். பேசாது படிகளைக் கடந்து என் பக்கத்தில் வந்து நின்றுன்.

"வாடா வழுதி"—எனது வரவேற்புரை இது.

"உன்னைப் பார்க்கத்தானே வந்து நிற்கிறேன். வாடா என்று அழைக்காவிட்டால் திரும்பியா போய்விடுவேன்!" என்ற அவனது வழக்கமான மறுப்பும் 'கிறுக்குத்தனம்' கலந்த மறுமொழியாக வரும் நன்றியுரையும் அன்று வெளிவரவே இல்லை.

"கடலில் அலை ஓய்ந்து விட்டதாமே!"

" ... ... "

"காற்று 'ரிட்டயர்ட்' ஆகிவிட்டதாமே"

" ... ... "

"என்னடா, 'சேட்டர் பாக்ஸ்', ஓயாத உன் வாய் அடைத்து விட்டது இன்று"

என்ன ஆச்சரியம்! அவன் கண்களில் அன்றுதான் தேங்கிய நீரைப் பார்த்தேன்! அனலின் வாடையை 'வாடகை'க்கு வாங்கிக் கொண்ட பெருமூச்சு என்மீது பட்டுத் தகித்தது! புன்னகை பூக்கும் முகத்தைச் சோகத்திரை மறைத்துக் கொண்டது, நிலவை மேகம் மறைப்பதைப்போல.......நேர்மையை, 'வாயடி, கையடி' தடுப்பதைப்போல!

அவன் பிடிவாதத்தைப் பொடிப் பொடியாக்க நான் ஒரு ஆயுதம் கண்டுபிடித்திருந்தேன், அமெரிக்கர் கண்ட அணுக்குண்டுபோல! மூலப் பகையை ஒழிக்க இராமன் பயன்படுத்தினுமே மோகனுஸ்திரம் அதுபோல. அது ஒரு மந்திரவேலை-என் ஆயுதம் ஒரு பாட்டு! அது அவனை ஆட்டிவைத்துவிடும். அந்தப் பாட்டு 'வள்ளிக் கணவன்பேரை வழிப்போக்கன் சொன்னுலென்ன' என்ற பாடலின் திருத்தப்பதிப்பு. 'வள்ளிக் கன்னியின்பேரை வாயினுல் சொன்னுலும், வெள்ளம்போல வருமே கோபம் வழுதிக்கு...' என்பேன். எதுகை, மோனை என்னைக் கண்டு அஞ்சியோடும்; இலக்கணம் தலை தாழ்த்தி நிற்கும்; இசையோ 'சைரன்' ஆகும்! ஆனுலும் வழுதிக்கு மட்டும் கோபம் வரும்.

வருத்தத்தால் வாய்திறவாத வழுதியை வம்புக்கிழுத்தாவது அவனது ஊமைத்தனத்தை ஒழிக்கலாம் என்று அந்தப் பாட்டைப் பாடினேன், எனக்கென்று அமைந்த அருமையான 'தகர டப்பா' குரலில்! ஏழரைக் கட்டையில் என் ஸ்தாயி ஓடினுலும். எதிரிக்குரல் காட்டும் வழுதி பேசாமலே இருந்தான். அப்பொழுது தான் அவன் மனம் புண்பட்டுள்ளது என்று உண்மையாகவே தெரிந்துகொண்டு ஆறுதல் கூற முற்பட்டேன்.

"ஏனடா, இந்தச் சோகம்?" என்றேன் பரிவுடன்.

"இது ஒரு நோயின் விளைவு" என்றான் வழுதி ஆழ்ந்த பெருமூச்சுடன்!

"வள்ளிக் கொள்ளை நோயோ?" என்றேன், தானே வந்து புகுந்துகொண்ட கிண்டலுடன்.

" ... ... "

அவன் விடை சொல்லவில்லை!

அவனது நோய் எனக்குப் புரிந்துவிட்டது. அவனுக்கு மன வியாதி — மருந்து கொடுத்துத் தேற்றமுடியாத பிணி! அது அவனைப் பற்ற ஆரம்பித்த 'பால காண்டம்' எனக்குப் புதிய தல்ல — நான் பலமுறை கேலி செய்து செய்து சலித்துப்போன அத்தியாயம்! அவனைச் சிரிக்கவைக்க வேண்டும் என்றே சில கேள்விகளை நகைச்சுவையெனும் தங்க முலாமிட்டு அவனிடம் நீட்டினேன். அவன் உதட்டைக் கிழித்துக்கொண்டு வந்த சிரிப் பைச் சிறையிட்டு விட்டான்.

"உன் நினைவில் யாராவது ஒருவர் அடிக்கடி வருவ துண்டா?"

சிரித்தான்.

"கண்களை மூடுகிற பொழுதெல்லாம் ஒரு குறிப்பிட்ட வடி வம் தோன்றி மறைகிறதல்லவா, நீரிலே தோன்றும் குமிழியைப் போல?"

சிரிப்பைச் சிறிதாக்கிச் சிந்தனையைப் பெரிதாக்கினான்.

"இரவில் உன்னைத் தூங்கவிடாமல் அந்த வடிவம் துன் புறுத்துகிறதல்லவா?"

பதில் இல்லை.

"அந்த வடிவத்தின் நினைவை மாற்ற எப்படி முயன்றாலும் தோல்வி காண்பதுண்டா?"

"என்னடா பைத்தியம் மாதிரி உளறுகிறாய்?"

என்று என் படையெடுப்பிற்கு எதிர் நடவடிக்கை எடுத் தான். நானா விடுபவன்! என் முற்றுகையை இன்னும் சற்று எச்சரிக்கையுடன் பலப்படுத்தினேன். எனது கேள்விப் பட்டா

ளங்கள் அவனது சிந்தனைக் கோட்டையைத் தாக்கின. எண்ணக் கோட்டை, கொத்தளங்களை என்னிடம் விட்டுவிட்டுச் சரணடையும்படி விரட்டின!

அந்த வடிவம் சற்றுக் குள்ளம் — ஆனால் அழகைக் குறைக்கிற அளவு அல்ல! குண்டு முகம், சற்று சதைப்பற்று அதிகமுள்ள மாம்பழக் கதுப்புகள் போன்ற கன்னங்கள், உயரமான மூக்கு, நீண்ட காதுகள், பலா வெடிப்பு போன்ற உதட்டுப் பிளப்பு ... ... இப்படிக் 'கம்பனிசம்' செய்கிற மாதிரியில் அமைந்த 'எல்லோரா'ச் சித்திரம்! ஒரே வண்ணத்தில் அமைந்த ஜாக்கெட்டும், புடவையும் அணிந்திருந்தது பார்க்கப் பரவசமாக இருக்கும். கவிஞர்களின் எடுத்துக்காட்டுகள் தோற்றோடுகிற அளவில் காலமெனும் ஓவியன், அழகு எனும் வண்ணச் சுண்ணக் குழைவுகளின் துணையினால், பருவம் எனும் தீட்டுகோலால் சிந்தித்துச் சிந்தித்துக் குறையின்றிச் செய்து முடித்த ஓர் அழகிய பெண் ஓவியம் அவள் — இப்படி என் மனதில் பட்டதையெல்லாம் கூறினேன். கடைசியில் அவள் தன் பெயர் வள்ளி என்று சொல்லி அவனது உள்ளத்தைக் கொள்ளையிட்டுக் கள்ளிபோல மறைந்துவிட்டாளோ என்றேன்.

வழுதியின் வதனத்தில் மீண்டும் உணர்ச்சிக்கீறல்கள் — ஆம், அவன் பெண்மையின் நாட்டியத்தில் கண்ட புதுமையின் விளைவால் அப்படி எண்ணப்பெட்டகமாக மாறியிருந்தான். அவன் மனத்தை மிகவும் வாட்டிவிட்டது ஏதோ ஒரு நடவடிக்கை — ஆம். வள்ளிதான் அவனது சோர்ந்த நிலைமைக்குக் காரணம்!

வள்ளி.........

யார் அவள்? வழுதியின் தோழி; கல்லூரித் தொடர்பால் கிடைத்த காரிகை. கடல் மணலில் சலித்தெடுத்த முத்து! ஆம். அவன் அவளுடன் படிப்பவனல்லன். அவள் ஆங்கிலம் படிப்பவள். அவனோ தாய்மொழி ஆராய்ச்சியிலிறங்கி விட்டான். எப்படி அவர்கள் சந்தித்தார்கள் — நெருங்கியவர்களானார்கள்? பெண் ஒரு காந்தக் கல்; ஆண் என்ற இரும்புத்துண்டு எங்கிருந்தாலும் ஒட்டிக்கொள்ளும்!

வள்ளியிடம் உள்ளத்தையே பறிகொடுத்துவிட்டு அவள் இட்ட கட்டளைகளை நிறைவேற்றுவதே தன் வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டிருந்தான் அவன். 'கண்ணின் கடைப் பார்வை காதலியர் காட்டிவிட்டால், மண்ணில் குமரருக்கு மாமலையும் சிறு கடுகாம்' என்று கவிஞர் சும்மாவா பாடுவார் ... ... ! அவளைப் பார்க்காத நேரம் அவன் வாழ்விலே பாழ் பட்ட நேரம்! அவளுடன் பேசாத நாவென்ன நாவே, அவள் சொல் கேட்காத செவியென்ன செவியே! வழுதி வள்ளி யுடைய இதயத்திலே இடம் பிடிக்க, கல்லூரிகளில் இன்ஜினி யர், டாக்டர் படிப்புக்கு இடம் வாங்க என்னென்ன 'ஷார்ட் கட்' முறைகள் கையாள்கிறார்களோ அத்தனையும் பயன் படுத்தினான்.

அவள் அப்படி என்ன பேரழகியா—? இல்லை, என்றால் ஒப்புக்கொள்ள முடியாது! ஆனால் அழகு என்பதன் இலக் கணத்தை நான் வரையறுத்து வைத்திருக்கிறேன். இயற்கை என்ற ஆசிரியர் உலக மக்கள் என்ற மாணுக்கர்களை அழைத்து ஒரு விசித்திரக் கணக்குப் போட்டார். மாணுக்கர்கள் தங்கள் விடையைக் குறித்துக் காட்டினர். ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக இருந்தது. அவை ஒன்றையொன்று மறுப்பதாகவும், எதிர்ப்பதாகவும் இருந்தன! அந்த விடைதான் அழகின் இலக் கணம்! ஆண்கள் அழகுள்ள பெண்களை அடைய விழைகிறார் கள். பெண்களும் அப்படியே! அழகின் இலக்கணம் ஒன்று கவே இருந்துவிட்டால் உலகில் எதுதான் நடைபெறும்?

முதன் முதல் கல்லூரித் தோட்டத்தில் கண்டான். கண்ட தும் காதல் கொண்டுவிடவில்லை. பிறகு பேசும் அவைக் களங் களில், பார்த்திடும் வாய்ப்புகள் கிடைத்தன. அப்பொழுதெல் லாம் அவனுக்கு ஒரு வகைப் பாசம் வளர்ந்தது, பெருகிற்று என்று உண்மையை ஒளிக்காமல் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். பிறகு ஒரு நாள் தேர்வு நடந்துகொண்டிருந்தது. அவள் மயங்கிக் கீழே விழுந்துவிட்டாள். ஆசிரியர் பதறினார். பணி மகன் மருத்துவரை அழைத்துவரப் பறந்தான். தலைமைப் பார்வையாளரும் வந்துவிட்டார். அதே மண்டபத்திலே அவ

னும் இருந்தான். அவன் உண்மையில் கதறிவிட்டான். அவள் கண்களைத் திறக்கும் வரை அவன் கருத்து இருண்டுவிட்டது. மருத்துவர் செய்த சிறு சிகிச்சைகளின் துணையினால் எழுந்து விட்டாள். ஆனால் அவளை உடனே விடுதிக்குச் செல்லப் பணித்தார்கள். வழுதி தானே துணை சென்று விட்டுவருவதாக அவளை அழைத்துக் கொண்டு நடந்தான். இதற்கு விதி என்று சொல்வார்கள் மூளைச் சோம்பேறிகள்; சந்தர்ப்பம் என்பார்கள் சிந்திக்கத் தெரிந்தவர்கள்! கையாலாகாதவன் கட்டிவிட்ட 'புதுக் கரடி' விதி—சமயம் சந்தர்ப்பம் என்ற மண்ணைக் கொண்டு! சிந்தனை ஒரு நீரோட்டம். அதன் போக்கில் நடைபெறும் செயல்கள் எல்லாம் சந்தர்ப்பங்கள், அந்த நீரோட்டம் எங்கும் ஓடமுடியாமல் தடைப்பட்டுக் குட்டையாகத் தேங்கி, கொசுவும் பிறவும் தோன்றிச் சமூகத்தின் சாக்காட்டிற்கு ஒரு வழியாகிறதல்லவா? அந்தக் குட்டையின் பெயர் விதி. வழுதி வள்ளியை அன்று பழக்கம் செய்துகொள்ள வாய்ப்பளித்தது சந்தர்ப்பம் - விதியை நம்பாத கூட்டத்தைச் சேர்ந்தவனுயிற்றே அவன்! அன்று முதல் வழுதி வள்ளிக் கணவன் போல வட்டமிட்ட வண்ணமே இருந்தான்.

பெண்கள் தூங்கியிருக்கும் இடத்தைப் பெயர் பல இட்டு அழைப்பதிலே மாணவர்களுக்கு ஒரு ஆனந்தம்—பெண்மை ஒரு இனிப்பு நிறைந்த பண்டம், ஆண்கள் அதன் இனிப்பை நேரடியாகச் சுவைப்பதற்கு முன்னர்ப் பல முறை, பல வகைகளில் அதன் இனிப்பைப் பேச்சாலும் எழுத்தாலும் சுவைக்க முனைகிருர்கள். அந்த விடுதி உள்ள திசையைக் கொண்டு பெயரிட்டு அழைப்பார்கள். கிழக்குத் திக்கின் ஒரு கோடியில் இருப்பதால் அதனைத் தூரக் கிழக்குப் பிரதேசம் என்பார்கள்; சிலர் அந்தப்புரம் என்பார்கள்; சிலர் பச்சை மாளிகை யென்று பெயரிட்டுத் தமது இச்சைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பார்கள்; என்னைப் போன்ற குறும்பர்கள் குமரிக் கோட்டம் என்று புது 'நாமகரணம்' செய்துவிட்டார்கள்! பருவம் என்ற மலர்க் காட்டில் உலவும்போது பெண்மை என்ற தென்றலிலே குளிக்கவும், தசையாசை யென்ற மலர் மணத்திலே மூழ்கவும் துடிப்பது

இயற்கை; காலம் எழுதிக் காட்டும் கட்டளை. ஆகவே பருவ வாயிலிலே பவனிவரும் மாணவப் பட்டாளம் இந்த அறப் பணி (!) யிலே இறங்கிவிடுகிறதுபோலும்! மனத்தில் எழும் பருவ விருப்பம் இலைபோட்ட விருந்து—பசிக்கு மட்டுமல்ல, ருசிக்கும் உகந்தது! கேலி, கிண்டல் என்பன சிறு ரொட்டித் துண்டும், 'ஸிங்கில் சா' வும். இரண்டும் பசியைப் போக்கு கின்றன. எளிதில் கிடைக்கக் கூடிய இரண்டாம் ரக முறையைப் பலர் கையாண்டு தங்கள் பருவப் பசியைத் தணித் துக்கொள்ளும் முயற்சியிலே வெற்றியடைகிறார்கள்! இல்லா விட்டால் மாணவிகள் செல்லுந் திசைகளிலெல்லாம் ஏன் இப் படிப் படை படையாகச் செல்கிறார்கள்? வாயில் வந்ததை யெல்லாம் பேசி, வராத சிரிப்பை வலுவில் இழுத்துப் போடுகிறார்கள்!

குமரிக் கோட்டம் ஒரு தேன் கூடு; பந்தத்துடன் திரிகிறார் கள் மாணவ வேடர்கள்! இதிலே வெற்றியடைபவர்கள் வெகு சிலரே; முயற்சியிலே இறங்கி முழு மூச்சாக வேலை செய்பவர் களை எண்ணுவதைவிட ஒவ்வொரு வகுப்பு 'அட்டன்டென்ஸ் ரிஜிஸ்டரை'ப் படித்துவிடலாம்! பெண்களிலே மட்டும் இந்த வயது கற்றுக்கொடுக்கும் 'வாலிப விஷமங்கள்' இல்லாமல் இல்லை. மாணவர்கள் தனியாக மாட்டிக்கொண்டால் மூக்குடை படாமல் திரும்புவது கடினந்தான்—அவர்களின் கேலியும், கெக் கெலிச் சிரிப்பும் ... ... அப்பப்பா! சற்று உயரமானவனாக அந்தப் பக்கம் போனால் 'பனை மரம்' என்ற அசரீரி வாக்கு அந்தக் கோட்டம் முழுவதும் ரீங்காரம் செய்யும். சற்று சிங் கார சீலர்கள் சென்றால் 'நாட்டு ஷோக்காளி' என்ற பட்ட மளிப்பு விழா வெகு வெற்றிகரமாக நடைபெறும்!

விடுதி வாழ்க்கை ஆற்று நீரில் குளிப்பதைப் போன்றது; எப்பொழுதும் நீந்தி விளையாட வேண்டும் என்பவர்களுக்கு அதிக வாய்ப்புகள்; குளித்துவிட்டு உடன் சென்று மற்ற கட மைகளையும் செய்ய முனைகிற 'பித்துக்குளிகள்' (!) பாடு ஆபத் துத்தான்! படிக்க வந்தவன் படிக்கத் தொடங்கினால் 'புக்வேம்' ஆகிவிடுகிறான்; ஒரு முறைக்கு இரு முறை படித்த பாடத்தைத்

திருப்பிப் படித்தால் 'டெவிலா'கி விடுகிருன்! பரந்த பல் கலைக் கழகத்திலே பலர் கற்றுக்கொள்வது 'வம்படி மாநாடு' கூட்டுதலும்; ஆண்டவனுக்கு வேண்டாத பூசையை நாளைக்கு ஆறு முறைக்குக் குறையாமல் செய்யும் பித்தலாட்ட புரோ கிதத் தரகனைப் போலப் பவுடர் அடித்துக்கொள்வதிலும், தலையைப் பல முறை வாரிவிட்டுக் கொள்வதிலும், புது முறை கள் கண்டு பிடித்தலுமே! பெற்ரேர்கள் வருந்திச் சேர்க்கும் பணத்திஞல் 'குட்டிக்கோரா' பவுடருக்குக் கும்மாளம்! 'ராஜா ஸ்னே'வுக்குக் குதூகலம்! சிலர் உண்மையில் படிக்கிருர்கள்; பயனடைகிருர்கள். அவர்கள் 'இலை மறைந்த காயைப் போல இருக்கிருர்கள். எல்லாம் தெரிந்த மனிதரைப் போல ஏய்ப்ப தில்லை' அவர்கள்! படிக்க வந்தவர்களிலே பலர் படிக்கவில்லை யென்று சொல்லிக்கொள்வதிலே பெருமையடைகிருர்கள், வெட்கந் துளியுமடையாமல்! 'இருக்கவே இருக்கிறது எஸ். எஸ். எம். புகைவண்டி' என்று கூறிக்கொள்வதிலே ஒரு திருப்தி யும், ஏதோ பெரிய காரியத்தைச் சாதித்துவிட்டதுபோல மகிழ்ச்சியும் அடைகிருர்கள். அதாவது தேர்வுகள் மார்ச்சிலும், செப்டம்பரிலும், மார்ச்சிலும் திரும்பத் திரும்ப வருகிறதைக் குறிப்பிட்டுவிட்டுத் தங்கள் திறமையைத் தூங்கவிடுகிருர்கள்.

மாணவ உலகம் ஒரு விசித்திரமான உலகம்; அதன் நட வடிக்கைகளும் சட்டதிட்டங்களும் புதியன! மாணவர்களே அவைகளைப் புரிந்துகொள்ளவும், ரசிக்கவும் முடியும். 'உலகம் பல விதம், அதிலே இவர் ஒரு விதம்' என்பது போல வழுதி யின் விதம் விசித்திரமானது. அவன் அன்று ஏன் கலங்கியிருந் தான் என்று என்ஞல் இன்னமும் புரிந்துகொள்ள முடியவில்லை, அவனும் இதுவரை சொல்லவில்லை. நானும் அவனை எளிதில் விடுவதாகவும் இல்லை.

"வழுதி, வாட்டத்திற்குக் காரணம் என்ன?"

"சொல்லத்தான் வேண்டுமா?"

"கட்டாயம்!"

அவன் என்னைப் பரிதாபகரமாகப் பார்த்தான். அவன் நிலைமையைப் பார்க்க எனக்கும் வருத்தமாகத்தானிருந்தது.

"வள்ளி இன்று வரச் சொல்லியிருந்தாள்"

ஹ ஹ ஹா ... ...

"போயேன் ... ... அங்கேதான் உனக்கென்று ஒரு நாற்காலி 'ரிசர்வ்' செய்யப்பட்டுள்ளதே, உட்கார்ந்து மணிக்கணக்கில் எதையாவது பேசித்தள்ளுவதுதானே!"

"கேலி கிடக்கட்டும், கேள் இதை......"

"ஏன் நிறுத்திவிட்டாய் மேலே......"

"போய் எந்த ஊர் கதையைப் பேசினாய்?"

"வேதனை தெரியாத விளையாட்டுக்காரன் நீ, புண்பட்டிருக்கிறேன், பாண்டியா! 'இன்று ஏன் அழைத்தேன் தெரியுமா உங்களை?' என்றாள் அவள்"

"ஆருடம் தெரியாது அம்மையே என்று அழுத்தந் திருத்தமாகச் சொல்வது தானே!"

"அப்படியேதான் சொன்னேன் சிரித்துக்கொண்டு—ஆனால் சிறிது நேரத்தில் என் சிரிப்பு எங்கோ ஓடி விட்டது. அவள் அப்படி வார்த்தைகளை வாரி இறைத்து விட்டாள். பாண்டியா, உனக்குத்தான் அவள் பண்பு தெரியுமே! நல்ல மனம், அருமையான சீர்திருத்தக் கொள்கைகள், பயப்படாத நடிவடிக்கைகள், படபடப்பான பேச்சு, எவரையும் லட்சியம் செய்யாமல் எடுத்தெறிந்து பேசும் சுபாவம், கண்டதை, கேட்டதை உடனுக்குடன் சொல்லிவிடும் ஓட்டை வாய்——இவைகளின் கூட்டுச் சரக்குத்தான் அவள்—என் வள்ளி! அவள் கேட்டாள் சில கேள்விகளை—நானும் பதில் சொல்லி வந்தேன். அவளின் முடிவுரை பால் போன்ற என் மனத்தை முறித்துத் திப்பி திப்பியாக்கி விட்டது! நான் ஏன் அவளுடன் பழகுகிறேன் என்பது அவளின் கேள்வி-'தென்றல் ஏன் அடிக்கிறது என்று கேளேன்' என்றேன். அதற்கு அடிப்படைக் காரணம் ஒன்று உண்டல்லவா? அவளின் அடுத்த வினா. 'அடிப்படை, தேர்வுக்கூடத்து மயக்கம்' என்று சிரித்து அவளை வேறு திசைக்கு இழுக்க முயன்றேன். பிறகு அவள் மூச்சு விடாமல் பேச ஆரம்பித்து விட்டாள். என்னை இடையே விடை சொல்ல விடவில்லை. நான் அவளோடு பழக்கம்

செய்துகொள்ளப் படாத பாடுபட்டேனும். அதற்குக் காரணம் என் நெஞ்சிலே நர்த்தனமாடிய நச்சு நினைப்பாம்—நாசகார எண்ணமாம்! அவளைக் கெடுக்கப் பல நாள் திட்டம்போட்டுச் சதிவேலை செய்கிறேனும். எப்படியாவது அவளை மயக்கி மாசுடையவளாக்க முயற்சி செய்கிறேனும். கெட்ட எண்ணத் தின் விளைவுதான் என் கேண்மையாம்—ஆகவே இனி நான் அவ ளுடன் எந்தவிதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாதாம், அவளுடன் பேசுவதும் தகாதாம்——இப்படி அவள் பேசினுள், என்னுல் தாங்க முடியவில்லை அவளின் குற்றச் சாட்டுகளை! இந்த வார்த்தைகளை எப்படிச் சகிப்பேன்? அதுவும் என் வாழ்வு முழுவதும் வைத்துக் காப்பாற்ற எண்ணியுள்ள இலட்சிய உயிரோவியமா இப்படிப் பேசுவது......? இப்படி எண்ணி னேன். என் கண்களிலே நீர் கசிந்துவிட்டது. அவள் அப்பொழுது உள்ளே சென்றிருந்தாள். என்னிடமிருந்து வாங்கியிருந்த 'இழந்த காதல்' என்ற ஏட்டைக் கடைசியாகத் திரும்பக் கொடுத்தாள். கொடுக்கும்போது அவள் கை நடுங்கிற்று. அவள் என் முகத்தைப் பார்த்தாள். 'கோ'வென்று அழுது விட்டாள்! நான் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்தேன், அவள் என்னையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தாள் போலும். நான் வீதியின் கோடிக்கு வந்து திரும்பிப் பார்க்கும்பொழுது அவள் வாயிற்படியிலே உள்ள இரும்புக் கதவுகளைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள்"

"இதுதானப்பா காலேஜ் காதல்" என்றேன்.

"அனுபவமில்லாதவன்!" என்முன் நீண்ட பெருமூச்சுக் கிடையே;

"அந்த அனுபவம் எனக்கு வேண்டாமப்பா படிப்பதற்கும். எழுதுவதற்குமே நேரமில்லை. உன்னைப்போலக் கதாநாயகன் வேடப்போட்டு, கதாநாயகியுடன் சதா உறவாடுவதும், 'வில்லன்களோடு' சண்டை போடவும் முடியாது!"

"வேடிக்கை ஒருநாள் வேதனை கலந்த வினையாகப் போகிறது, அன்று நான் சிரிப்பேன், நீ அழுவாய்"

சாப்பாட்டு மணியொலித்தது. இருவருமே சென்றோம்.

2

"பாண்டியா, மாலை நேரமாயிற்றே, எங்கேயாவது இப்படிப் போகலாமே" எழினியின் குரல் கேட்டது.

"இன்று முக்கியமான வேலை இருக்கிறது. என்னை மன்னித்துக் கொள்" என்றேன் உள்ளிருந்தபடியே.

அதற்குள் கதவுகளைத் திறந்துகொண்டு அவன் உள்ளே வந்துவிட்டான். அவன் ஒரு 'ஷோக் சுந்தரம்'! வேளைக்கொரு ஆடையுடுத்துவான்; நிமிடத்திற்கொரு முறை 'பவுடர்' அடிப்பான். ஒரு நாளில் தூங்கும் நேரம் போக மீதிப் பொழுதில் பாதிப்பொழுது சீப்பும், கண்ணாடியுமாகவே இருப்பான். அக்கால வீரர்கள் தூங்கும் பொழுதுகூட வாளையும் தம்முடன் வைத்துக்கொண்டு தூங்குவார்களாம்-இவனோ சீப்பைத் தனது சட்டைப் பையிலேயே அடக்கம் செய்திருப்பான். பெண்கள் அழகுக் கூட்டம்; அவர்கள் அழகுக்கு மேல் அழகு செய்கிறார்கள்! ஆண்களுக்கு அகோரம் தேவை என்று வாதாடவில்லை; அலங்காரம் தேவை—அளவோடு, அவசியத்தோடு; அந்த எல்லைக் கோட்டைத் தாண்டுகிறபொழுது கண்டனத்திற் குரியவராகிறார்கள்! பெண்மை எதிர்பார்ப்பது பவுடர் போட்ட முகத்தையல்ல, பண்பட்ட உள்ளத்தை. மழுங்கச் சீவிய 'கிராப்பை' யல்ல, அறிவை! மைனர் செயின் தெரியப் போடும் 'சில்க்ஜிப்பா'வை அல்ல, வலிய தோள்களை! உடை வெளுப்பு மட்டுமல்ல கவர்ச்சி முறை, அது உள்ளத்தோடு ஒட்டியது! ஆனால் வெளித் தோற்றத்தில் ஏற்படுவது மயக்கம்–கண நேரத்திற்குள் நடக்கும் மௌன நாடகம்! அந்த மனமாழ்குதலும் உண்மைப் பெண்மையின் பண்பல்ல, பெண்மையினுடைய பேதலிப்பின் வேலை! இதைப் பலர் உணர்வதில்லை. அவர்களிலே எழினி ஒருவன். ஆனால் அவன் ஒரு வலை வீசி! அதிலே வெற்றியுங்

கண்டிருந்தான். அந்த வெற்றியின் சின்னந்தான் அழகி! அவள் அவனிடம் மனதைப் பறிகொடுத்திருந்தாள்.

"என்னப்பா, அவ்வளவு கடுமையான வேலை?" என்றான் அவன்.

"எழுத வேண்டும், இந்த மூன்றாம் நாள் செல்ல வேண்டும் இந்த 'மேட்டர்' தவக்கமின்றி"

"எழுத்தாளரே, இரவு வந்து முடிக்கலாமே! கதாசிரியர் களே இப்படித்தான். எதையாவது எழுதிக்கொண்டே காலத் தைக் கழித்து விடுவார்கள். காகிதத்தால் கோட்டை கட்டி, பேனாவினால் ஆட்சி செய்து விடுவார்கள். உலகத்தில் ஒட்டாத பிறவிகள். கற்பனையிலேயே காலத்தைக் கழித்து விட்டு உண்மை உலக மகிழ்ச்சியாட்டங்களில் தோல்வியடை கிறார்கள்!"

"நிறுத்தும் ஐயா, பேச்சாளரே, இப்பொழுது எங்கு போவது? பட்டாம் பூச்சிகளைப் பார்க்கவா?"

"அப்படித்தான் வைத்துக்கொள்ளேன்!"

"சரி, புறப்படு"

இருவரும் கிளம்பினோம், பேசிக்கொண்டே சென்றோம்.

"எழுத்தாளர்கள் வாழ்க்கையின் முழுச் சுவையை அனுப விக்க முடிவதில்லை — சம்பளத்திற்குச் சமைப்பவனுக்கு அந்த உணவின் ருசியை உணர முடிவதில்லை! மிட்டாய்க் கடை வைத்திருப்பவன் இனிப்பைக் கண்டாலே முகஞ் சுளிக்கிறான். அது போலக் கற்பனையிலே பல வாழ்க்கைகளை அமைத்து அமைத்துச் சொந்த வாழ்க்கை சுவைகுன்றிப் போகிறது"

"தோழா, சொந்த வாழ்க்கைக்கு அவை ஒத்திகைகள் ... பலமுறை ஒத்திகை பார்த்தால்தான் நாடகம் நல்ல முறையி லிருக்கும்"

"இறக்கைகொண்டு சஞ்சரிப்பவர்கள் அவர்கள்"

"என்றாலும் பார்வை இந்தப் பரந்த உலகத்தின்மீதுதானிருக்கும்"

"எழுத்துலகில் சஞ்சரிக்கும் சில உன்னத சொற்கள் நடைமுறை உலகில் பொருளற்ற சொற்களாகவே போய்விடுகின்றன"

"பல எட்டாத இலட்சியங்களை எடுத்துச் சொல்கிறார்கள்—வேண்டுமென்றே!"

"மக்கள் எட்டித் தொட முயற்சியாவது செய்யட்டுமே என்ற நல்லெண்ணத்தோடு!"

"காதல், காதல் என்று தீட்டுகிறார்களே, இது என்ன பித்தலாட்டம்!"

"காதல் பித்தலாட்டமா ... ...! நீ ஒரு விசித்திரமான பிறவியப்பா, இப்படி உன்னைத் தவிர வேறு யாராலும் சொல்ல முடியாது"

"ஆண், பெண்ணை அடிமை கொள்ள எழுதிவைத்த கட்டுக் கதை காதல்—ஆண்மையின் விசித்திர மூளையில் உதித்த புளுகுப் புராணந்தான் காதல்"

"இது உன் சொந்தமா, இரவலா?"

"என் அனுபவத்தில் வடித்தெடுத்த உண்மை"

எழினியின் வாதத்தை என்னால் நம்ப முடியவில்லை. அவன் அழுத்தமாகவே தன் கருத்தைச் சொன்னான். அவன் அதற்காகத் திரட்டிய சான்றுகள் அத்தனையும் சொல்லி முடியாது! அவன் காதல் என்பதை நம்பவே இல்லை. ஆனாலும் அவன் அழகியுடன் தொடர்பு கொண்டிருந்தான், அவளுக்காக எதையும் செய்யத் தயாராக இருந்தான்—! இருந்தாலும் அதனை அவன் காதலின் தூண்டுதல் என்று ஒப்ப மறுத்தான்.

காதல்தான் என்ன? ஆண்டு பலவாகக் காவியங்களில், ஓவியங்களில், சரித்திரங்களில், சித்திரங்களில், கவிதைகளில், கதைகளில் ... ... வட்டமிட்ட அந்தச் சொல் அசைச் சொல்போல

அர்த்தமற்ற சொல்லா? கவிஞர்கள்பலர் கணக்கில்லாத பாடல் களில் கொட்டி வைத்த உணர்ச்சிக் குவியல்கள் அத்தனையும் அதன் பொருளை விளக்கும் வலுவை இழந்து விட்டனவா? காளிதாசனும், கம்பனும், ஷேக்ஸ்பியரும் புளுகர்களா? இல்லை... எழினி கூறுவதை ஒப்ப முடியாது! ஆனால் அவனுக்குப் பதில் கூறித் தானாக வேண்டும்.

காதல் — மோகனமான மூன்று எழுத்துக்களின் பின்னல்! அதற்கு எவ்வளவு சக்தி, வலிமை! உலகத்தையே ஆட்டி வைக் கிறது! இந்தச் சக்தியை எதிர்த்து எத்தனை முனிபுங்கவர்கள், ரிஷி சிரேஷ்டர்கள், சித்தர்கள், ஜீவன் முக்தர்கள் தோல்வி கண்டிருக்கிறார்கள்! மக்கள் கிடக்கட்டும், முக்கடவுளும் அவர் அடி புரக்கும் தேவர்களும் இச் சக்திக்கு அடங்கித்தானே வாழ் கிறார்கள்!

காதல் ஒரு போர்க்களம் — அங்கு ஆண், பெண் இருவரின் எண்ணங்கள், உணர்ச்சிகள் சந்திக்கின்றன பேரார்வத்தோடு! சமாதானம் நடப்பதும் உண்டு! உடன்படிக்கை தீட்டுவதும் உண்டு; படுதோல்வியடைவதும் சர்வ சாதாரணம்! போராட் டத்தின் முன் நடவடிக்கைகளையும், முடிவில் உள்ள ஒரு நிலைப் படாமையையும் கண்டு பயந்தவர்கள்தாம் காதலையே குறை கூறிவிடுவார்கள்.

காதல் ஒரு சந்திப்பு — பெண்மையின் தாகமும், ஆண்மை யின் வேட்கை வேகமும் ஒன்று கலக்கின்றன!

காதல் ஒரு காட்டுக் கொடிப் பாதை—அதன் வழியாகச் சென்று ஆனந்த வாழ்க்கை என்ற இடத்தை அடைவது கடினந் தான். கடினத்தை மனத்தில் வைத்துக்கொண்டு பாதையைக் குறை கூறுவதா? இறங்குவோரின் திறமைக் குறைவைச் சுட்டிக் காட்டுவதா? சிந்தித்து முடிவிற்கு வந்தால் காதல்தான் நல்ல தீர்ப்பை உரிமையாக்கிக்கொள்ளும்.

காதல் ஒரு பாலைவனம்—காதல் ஒரு மலர்வனம்—காதல் வளர்பிறைச் சந்திரன்—காதல் கானல் நீர்—காதல் ஒரு காட் டாறு—காதல் ஒரு ஜீவநதி......என்று இப்படி அடுக்குவார்கள்.

ஆனால் எழினியைப்போல் யாரும் இவ்வளவு தீவிரமாகக் காதலை எதிர்க்க மாட்டார்கள். காதல் என்ற பண்பையே இல்லாமல் செய்ய முனைகிறான். அதற்குரிய சக்தியையே குறைக்கவும் பார்க்கிறான். காதலுக்கு வலிமை உண்டென்பதையே பித்த லாட்டம் என்று கூறுகிறான். அவன் வாதங்களைத்தான் பார்ப் போமே...!

'பெண்ணோடு ஆணே பேசிடில் தனியே பேத புத்தி யாகும்மே...' என்ற அடியைச் சுட்டிக் காட்டி அந்தப் பேத புத்திக்கு வேறு பெயர் காதல், ஆறிப்போன இட்டிலிகளின் உலுத்தலுக்கு உணவுக்கடைக்காரன் கொடுக்கிற மைசூர் மசாலா என்ற புதிய பெயரைப்போல! எந்தப் பெண்ணையும், எந்த ஆடவனும் பழக்கத்தால் அந்தப் 'பக்குவத்திற்கு'க் கொண்டு வரலாம், மிக எளிதாக எண்ணுகிறான் நாம் எதிர் பார்க்காத இருவர் அந்தப்புர இணைப்புகளாக இருப்பர். சந்தேகிக்கக்கூடிய வகையிலுள்ள இருவர் அந்த அகநானூற்றுத் தலைவனும், தலைவியுமாவதில்லை. சந்தர்ப்பம் சமைக்கும் பழக்கத் தின் விளைவாகப் புத்தியிலே பேதலிப்பு........பிறகு அவர்கள் அதற்கு 'நாசூக்கான' பெயர்சூட்டி விடுவார்கள். அங்கு தகுதி கள் தவிடு பொடியாகும், குலம் ஓடும், சாதி பறக்கும் என்றெல் லாம் கூறுவதன் உட்பொருள் இதுதான்; காதலுக்குக் கண் ணில்லை என்பதும் இந்தப் புத்தி மாறாட்டத்தின் விளக்க வுரையே! காரோட்டும் கண்ணுசாமியும், வீட்டுத் தலைவி விமலாவும் படுக்கையறைத் தோழனும் தோழியுமாகலாம்! ஆராவமுது அய்யங்காரின் மகள் அபிராம சுந்தரியும், குலாம் காதரும் குலவி மகிழும் உரிமையைத் தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளலாம்! இதற்குக் காதல் என்று கூறமுடியாது, கூறக் கூடாது!

காதலின் சக்தி மனித சக்திக்கும் அப்பாற்பட்டது என்று பிதற்றுவது சுத்த வடிகட்டின அயோக்கியத்தனம். காவியங் களில் வருகிற காதலையே எடுத்துக்கொள்ளுங்கள். சகுந்தலை காதலித்த துஷ்யந்தன் ஏன் அப்படி மாறினான்? கதைப்படி சாபம் காரணமானாலும், பகுத்தறிவுப்படி அது காரணமாக

முடியாது! இராமபிரானே சீதையைக் காட்டுக்கு ஓட்டும்படி தானே கம்பர் காட்ட முடிந்தது! காதல் இரண்டு ரகமா? ஆண் காதல், பெண் காதல் என்று பிரித்துவிட வேண்டுமா? காதல், கற்பு ..என்றெல்லாம் கதைப்பது பெண்ணின் ஆசையை, ஆர்வத்தை அடக்கி யொடுக்கி ஆண் அரியாசனம் ஏறச்செய்யும் சூழ்ச்சி!-எழிலியின் வாதத்திலும் உண்மையும் ஒப்புக்கொள்ளப் படவேண்டிய உயரிய கொள்கையும் இல்லாமல் போகவில்லை.

என்றாலும் காதல் ஒரு நாணயம்—ஆண், பெண் என்ற இரு முத்திரைகளும், இரண்டு பக்கங்களிலும் குறிப்பிட்ட முறையில் பொறிக்கப்படாவிட்டால் அது செல்லாக் காசாகிவிடும்! இதனை எழிலி உணரவேண்டும்.

பெண் சில பண்புகளை ஆணிடம் எதிர்பார்க்கிறாள். பெண்ணின் மனம் ஒரு கடல். அதில் முழுகி முழுகி, முத்துக்களை எடுக்கலாம்! அவள் மனத்திலே மறைந்து கிடக்கின்ற எண்ணத்திற்கேற்ப எந்த ஆண் அமைகிறானோ அவனிடம் அவளின் மனம் நிற்கிறது. அதற்குப் பெயர் கவர்ச்சி...காதலல்ல என்கிறான் அவன். அறிவை விரும்பலாம், உடல் வனப்பைப் பெரிதாக எண்ணலாம், குணத்தை எதிர்பார்க்கலாம், பணத்தை மதிக்கலாம்! இவற்றின் விளைவாக அவள் மனத்திலே தோன்று கிறதே நெகிழ்ச்சி, மனஉருக்கம் அதுதான் காதல்! ஆணும் அப்படித்தான் சில பண்புகளைப் பெண்ணிடம் எதிர்பார்க்கிறான். அவை எங்கு அமைகிறதோ அங்கு மனம் மயங்குகிறான் கோயிலிலுள்ள சிலையை ஆத்திகன் ஆண்டவன் என்கிறான், நாத்திகன் செம்பாலான வடிவம் என்கிறான் — அப்படித்தான் மன நெகிழ்ச்சியை நான் காதல் என்றும் அவன் கவர்ச்சி என்றும் கூறுகிறோமா? அவன் வாதம் சரியா, என் சமாதானங்கள் தோற்றோடி விட்டனவா?

பெண்ணையும், ஆணையும் சேர்ந்துவாழவே இயற்கை உண்டாக்கிற்று! அவர்களின் இணைப்பைத் துரிதப்படுத்த அமைந்த மனவேகந்தான் காதல் — ஆகவே அதற்குத் தனி மகத்துவம் கற்பித்து, தெய்வீகம் ஏற்றித் துதிப்பானேன்? தலைவிதி,

தெய்வ சக்தி, மந்திரம், மாயம், சகுனம், சாதகம், சோதிடம், சாத்திரம், சாதி, சம்பிரதாயம், குலம், கோத்திரம், 'மதம், ஆச்சாரம் பழக்கம், வழக்கம்.........என்று பலவற்றிலும் குறை பேசுகின்ற அதி தீவிரவாதியும் இந்த சக்தியிடம் மண்டியிடுவது ஏன்? அப்படியானுல் அதன் சக்தியைப் புறக்கணிக்க முடியாதா!

காதல் வான்முகட்டில் தோன்றும் வர்ண வளையமாம் வான வில்லா? வாழ்க்கையில் தொட்டுச் சுவைக்க முடியாத எட்டாப் பொருளா? வாழ்க்கையுடன் பின்னிக் கிடக்கும் உணர்ச்சி அலைகளின் மோதல்தான் காதல்—ஆம், நாம் செய்யும் செயல்களில் நிச்சயமாக இடம் கேட்கும், காதல்! ஆனுல் அது நம் சக்திக்குக் கட்டுப்பட்டது என்பதையும் உணர வேண்டும்.

எழினியும், நானும் பல மணி நேரம் இதைப்பற்றி வாதித்துக்கொண்டிருந்துவிட்டோம். மாணவர்கள் பலர் திரும்பித் தத்தம் அறைகளுக்குச் சென்றுகொண்டிருந்தனர். ரேடியோவை நிறுத்திவிட்டான் அந்தப் பணிமகன். நாங்கள் இருவரும் எழுந்து விடுதியை நோக்கி நடந்தோம். அப்பொழுதும் எழினி அவனது ஆராய்ச்சியுரையை நிறுத்தவில்லை.

"பாண்டியா, நீ இனிக் காதல் கதைகளை எழுதுவதை நிறுத்திவிடு. எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. ரிக்ஷா இழுப்பவனைப்பற்றி எழுது, கல்லுடைப்பவனைப்பற்றித் தீட்டு, குப்பை கூட்டிடும் வறியவனைப்பற்றிக் கற்பனையை எழுப்பு ... ..."

"உலகு ஒரு வண்டி; அதன் சக்கரங்கள் ஆண்மையும், பெண்மையும்; அதற்கு அச்சாணி காதல்!"

"பைத்தியக்கார எண்ணம்!"

அப்பொழுது எதிரில் ஐந்தாறு பெண்கள் சேர்ந்து வந்தார்கள். என்னுடன் பேசிக்கொண்டிருந்த எழினியின் கண்கள் அந்தப் பக்கம் பாய்ந்தன. நான் மனதிற்குள்ளே சிரித்துக்

கொண்டேன். சொல்லொன்று செயலொன்ருக உள்ள இந்த உலகத்து நடவடிக்கையைப் பார்த்தேன்—சிரித்துத்தானே ஆற்றிக்கொள்ள வேண்டும்? அந்தக் கூட்டத்தில் அழகியும் இருந்தாள்.

"தோழர் எழினி, ஒரு வார்த்தை"

அழகி நின்ருள். அவளுடன் வந்தவர்கள் போய்க்கொண்டே இருந்தார்கள். அவனும் நின்ருன். நான் நடந்துகொண்டே இருந்தேன். பிறகு இருவரும் பேசிக்கொண்டிருந்தனர்.

என் பின்னுலேயே எழினி வந்து என் தோளைப் பற்றினுன். திரும்பினேன்.

"என்ன, கவர்ச்சியோடு (!) அதிக நேரம் அளவளாவ ஆரம்பித்துவிட்டாய்?"

"கவர்ச்சியா ... ... அழகிக்கு நீ வைத்திருக்கும் புதுப் பெயரா?"

"இல்லை அப்பா, உனது தத்துவார்த்தப்படி காதலுக்குப் பெயர் கவர்ச்சிதானே?"

அவன் சிரித்தான், தெளிவில்லாமல்!

"நான் நியூடன்; சூரியன், சந்திரன், பூமி ... ... ஆகியவை தன்னிடத்திலிருந்தபடியே சுற்றி வரவேண்டும். அதற்கு ஏற்ற முறையிலுள்ள சக்திக்குப் பெயர் நிலக்கவர்ச்சி ... அதுபோல மனிதன் ஒரு கூட்டு வாழ்க்கைப் பிராணி. அவன் தனித்து வாழ முடியாது. அதற்குப் பயன்படும் கவர்ச்சி இந்த ஆண், பெண் இணைப்பு ... ..." எழினியின் பேச்சு இப்படி நீண்டது.

"அழகியுடன் இத்தனை நேரம் என்ன பேசிக்கொண்டிருந்தாய்? ஒளிக்காமல் சொல்லிவிடு"

"அவள் என்னைக் கடிந்துகொண்டாள்"

"ஏன்?"

* * *

"நீங்கள் ஏன் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவதில்லை?"

"அங்கு வராததால் ஆசை குறையவில்லையே ... வளர்ந்து கொண்டே இருக்கிறது. பல முறை அங்கு வந்தால் பார்ப்பவருக்குச் சந்தேகம் பிறக்கும்"

"ஊருக்கு பயந்து உயிர் வாழ முடியாது. உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரையும் திருப்தி செய்ய முடியாது. அப்படி முயற்சி செய்பவன் ஒரு முட்டாள். ஆகவே நீங்கள் வாருங்கள். பிறருக்கு அஞ்சி வாழ நாம் கோழைகளல்லர்."

"அழகி வள்ளியும் வழுதியும் எப்படிப் பழகினார்கள்? இப்பொழுது பார்த்தாயா?"

"அவள் ஒரு அவசரக்காரி. அந்த மாதிரி என்னை நினைக்க வேண்டாம்"

"அடுத்த வாரம் வருகிறேன். நாளை பாண்டிச்சேரி போகிறேன் ..."

"ஏன் ...?"

"வேடிக்கையாகத்தான் ... ..."

"அப்படியானால் நானும் வருகிறேன்."

* * *

அவர்கள் பேசிய உரையாடலை ஒரு எழுத்தும் மாற்றாமல் என்னிடம், ஒப்புவித்துவிட்டான். அவள் அவனுடன் புதுச்சேரிக்குத் தனித்து வரவும் தயாராகிவிட்டாள்! நீதியற்ற காதல் — நேர்மை கெட்ட காதல் ...! வழுதி கண்ணீர் வடிக்கிறான். எழினி தள்ளிவைத்தாலும் தானே வந்து அழைக்கிறாள்

அழகி. வள்ளி, அழகி — — இருவரும் பெண்கள்; ஆனால் வெவ்வேறு கோணங்களில் நிற்கிறார்கள். வெவ்வேறு துருவங்களாகக் காட்சியளிக்கிறார்கள்! பெண்மை ஒரு விளக்கு; அதற்குப் பல வர்ணத் துண்டுக் கண்ணாடிகளால் வெளியுருவத்தை அமைத்திருக்கிறார்கள். பார்ப்பவன் எந்த நிறக் கண்ணாடியின் மூலமாக ஒளியடைகிறானோ அந்த நிறந்தான் அந்த ஒளியென்று பிடிவாதம் பிடிக்கிறான். எழினி அழகியைக் கொண்டு பெண்மையை அளக்கிறான். வள்ளியைக் கொண்டு வழுதி ஒரு முடிவிற்கு வருகிறான். அதனால்தான் வித்தியாசந் தோன்றுகிறது!

ஆணின் மனம் இருட்டறை; பெண்ணின் அன்பெனும் ஒளி புகவேண்டும்! ஆசை அலைகளின் போட்டிப் பந்தயத்திற்குத் தான் காதல் என்று பெயர்! காதல் கட்டங்களில் ஆண்மை அதிக பங்கு எடுத்துக்கொள்வதும் உண்டு. பெண்மையின் பாகம் அதிகமிருப்பதும் உண்டு. அழகியின் காதலில் அவளே தான் அதிகமாகப் போராடுகிறாள். எழினி எட்டி நின்று வேடிக்கை பார்க்கிறான்! வள்ளியோ உள்ளப் புரட்சியால் அவதிப்படும் வழுதிக்கு அன்பு மொழி கூறி ஆதரவுங் கூறாமல் அவனை விரட்டிவிட்டாள்! ஆனாலும் அப்படிப் பிரியும்போது அழுதுவிட்டாள். ஆண் மனம் இரும்பு, காதல் என்ற அனலால் அதனை உருக்கிவிடலாம். வேறு பல முறைகளில் அதை உருக்க முனையலாம், அவ்வளவு எளிதல்ல! பெண்ணின் உள்ளம் பனிக்கட்டி போன்றது. சாதாரண நிகழ்ச்சிகளிலும் உருகி விடும். ஆனால் காதல் வெப்பத்தால் அது உருகும்போது அந்நீரின் ஓட்டத்திற்கு அதிக வேகமும் சக்தியும் உண்டு!

வள்ளி, வழுதியின்மீது சொன்ன குற்றச்சாட்டு மிகவும் பொல்லாதது, வாதத்தில் எதிர்த்து நிற்கும் வல்லமை இல்லாதது! அவளைக் கெடுத்துவிடுவதற்காகவே வழுதியுடன் பழகுகிறான் என்றால் எவ்வளவு பைத்தியக்காரத்தனம்—! அவனுக்குத் தன்னையே அடக்கியாளும் திறமில்லையா? அவனது உணர்ச்சி 'கட்டுத் தறியில்' அகப்படாமல் துள்ளித் திரிகிறதா? அவள்

மீது அவளுக்கே நம்பிக்கையில்லையா? வள்ளி படிக்கிறவள்...! அவளுக்கே தன்னை ஒரு ஆணின் மயக்க வலையிலிருந்து காப்பாற்றிக்கொள்ள முடியாது என்று ஆண் தொடர்பையே நறுக்க முனைந்தால் படிக்காத பட்டிக்காட்டுப் பெண்களின் நிலை என்ன ஆவது ...! அவர்கள் ஏமாறுவதில், அந்த ஏமாற்றத்தாலடையும் அவதிகளுக்குள்ளாவதில் கொஞ்சமும் தவறில்லையல்லவா? ஒரு இளம் பெண்ணுக்கு ஆணின் நட்பு இரு பக்கம் கூர் தீட்டப் பெற்ற கத்தியுடன் பழக்கம் போலத்தான்! கத்தி குத்திடவும் உதவும், வேறு பல பயனுள்ள காரியங்கள் செய்திடவும் கருவியாகும்! அதனை நடைமுறையில் பயன்படுத்துவோரின் அறிவையும், திறனையும் பொறுத்தது; ஆண் எந்தப் பெண்ணையும் முதலில் அந்த மயக்க உறவுக்கு அழைக்க முயலுவதில்லை. பெண் என்ற அனலில் வாட்டப்பட்ட பின்னரே, ஆண் மனம் என்ற இரும்புத் துண்டு நினைத்தபடியெல்லாம் வளைந்து வளைந்து கொடுக்கும்.

எழினி அழகியுடன் புதுவை போவதாகக் கூறினான். அவன் முகத்தில் மகிழ்ச்சியின் நிழலாட்டம் தெரிந்தது. அந்த மகிழ்ச்சியைப் பார்க்கிற நேரத்தில் எனக்கு ... ... வழுதியின் பரிதாபமான முகந்தெரிந்தது! அவன் அன்று கூம்பிய தாமரை போல இருந்தது என் நினைவிற்கு வந்தது. ஆனால் இந்த வகை நோய்க்கு எந்த மருத்துவரும் மருந்து கொடுக்க முடியாதே! நான் அவனுக்கு நெருங்கிய நண்பன். அவனுக்கு உதவி செய்ய ஆசை ... ... ஆனால் வழி ... ... ?

3

கல்லூரிகளில் ஒவ்வொரு பாடப் பிரிவிற்கும் ஒரு கழகம் வைத்துள்ளார்கள், பெயரளவில்! அவை ஒவ்வோராண்டும் செய்யும் பெரும்பணி மூன்று பருவத்திற்கும் தலைவர், செயலாளர் தெரிந்தெடுப்பது. அவர்கள் பெயர்களைப் போட்டு 'லெட்டர்ஹெட்' அடித்துக் கொள்வது, முதற் பருவமானால் தொடக்க விழாவிற்கு ஒரு 'பெருந்தலை'யை இழுத்து வருவது; கடைசிப் பருவமானால் ஆண்டு இறுதி விழாவிற்கு ஒரு பெரியவரை அழைப்பது, மீதி நாட்களில் செயலாளர் அறையில் 'மினிட்ஸ்புக்' தூங்கும். கழகத்தின் வேலைகளை, அறிக்கைகளை தாங்கியிருக்க வேண்டிய காகிதங்கள், அமைச்சரின் அப்பாவுக்குப் பணமனுப்பவேண்டும் என்று தந்தியாகும். அத்தை மகள் சுந்தரிக்கு 'அடுத்த திங்கள் வருகிறேன்' என்று தூது சொல்லிவரும். பெரிய மாமாவுக்கு வீட்டுத் தகராறுகளை விளக்கும் ஏ. பி., யு. பி. செய்தி விவரங்களைச் சுமக்கும் தினசரியாகும். காலையில், தினம் பற்பொடி தாங்கும் 'பாக்கியம்' பெறும். 'ஷேவிங்' செய்து சேகரித்தவைகளை எடுத்துச் செல்லும் புண்ணியத்தைக் (1) கட்டிக்கொள்ளும்..! ஏதாவது உருப்படாத (!) காரியங்கள் செய்கிறதென்றால் ஒரு பொருள் பலருரை, இரண்டு மூன்று மாணவர்களை எதையாவது எழுதிப் படிக்கவிடும் வேடிக்கை, அதிகக் கூட்டம் வந்ததாகக் காட்டிக்கொள்ள ஒரு சொற்போர் அதில் இரண்டு குமரிகளைக் கலந்துகொள்ளச் செய்து காரியத்தை எளிதாக்கிக்கொள்ளும் தந்திரம் —! பேராசிரியர்கள் என்ன செய்வார்கள்? நீர் இருக்கும் இடத்தைத்தான் காட்ட முடியும். குதிரைக்கு நீரை ஊட்டவும் முடியுமா? சிலர் இந்தக் கழகங்களை நல்ல முறையில் நடத்துகிறார்கள். பல மாணவர்கள் பயன்படுத்தியும் கொள்கிறார்கள்! அவர்கள் வாழட்டும்......!

எனக்கு இந்தக் கூட்டங்களில் கலந்து கொள்வதென்றால் துளியும் பிடிப்பதில்லை. அநேகமாக ஒரு கூட்டத்தில் மிஸ்டர்

காலி பெஞ்சும், தோழர் ஆளில்லா நாற்காலியும். நானும் உட்கார்ந்திருப்ப தென்றால் என்னால் சகிக்க முடியாது! கூட்டங்களில் பேசும் பழக்கமும் என்னிடம் இல்லை. ஆனாலும் என்றாவது ஒரு நாள் மேடை ஏறிவிட வேண்டும் என்ற ஆசையுண்டு. நேரமும் வாய்ப்பும் கிடைக்கிற போதெல்லாம் ஆங்கிலக் கூட்டமானாலும், தமிழ்க் கூட்டமானாலும் போய் அமர்ந்து விடுவேன். என்ன பேசுகிறார்கள் என்று கவனிப்பதைவிட, பேசுபவர்கள் எங்கெங்கு தவறுகிறார்கள் என்று கண்டு பிடிப்பதிலே எனக்கு அலாதியான பிரியம்! மனித இயற்கையே குறை காண்பது என்றுகூடச் சொல்லிவிடலாம். பலருடைய தொடை நடுக்கம், குரல் கரகரப்பு, வாய் குளறல், நின்றுநின்று ஓடும் பேச்சோட்டம் ... ... இத்யாதி பேச்சாளர்களின் திருக்கல்யாண குண விசேடங்கள் என் சிந்தனையில் அடிக்கடி படும். ஆகவே எந்தக் கூட்டத்திலும் இப்படிப் பல வேடிக்கைகளைப் பார்க்கலாம். ஆனால் ஏதோ சில கூட்டங்களுக்குத்தான் போக முடியும்.

கூட்டங்களைக் கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்ட எனக்கு அந்தச் சுவையைச் சற்று எடுத்துச் சொல்லும் உரிமை உண்டல்லவா? கூட்டங்களை இரண்டு வகையாக ஏற்பாடு செய்கிறார்கள் — சொற்பொழிவு, சொற்போர்! சொற்பொழிவு ஆரம்பப் பேச்சாளர்களுக்குத் தேவையில்லை என்பதுதான் உண்மையான அறிவுரை. பேசப் பழகுவோர் பங்குகொள்ள வேண்டியது சொற்போர்களில்! அதில்தான் உடனுக்குடன் சிந்திக்க வேண்டிய அவசியமும், மறுப்புக் கொடுக்க வேண்டிய இன்றியமையாமையும் உள்ளன. ஆகவே சிந்திக்கிறான். பிறகு கோவைப்படச் சொல்லமுனைகிறான், எதிரி ஒப்புக்கொள்கிற முறையில், புரிந்துகொள்கிற வரையில்! இப்படிப் பயிற்சி தொடங்கி முடிந்த பிறகு சொற்பொழிவில் ஈடுபட்டால் வெற்றி அடையலாம். எடுத்த உடனே கதாநாயகனாக முடியாது, நாடக மேடையில்! ச, ரி, க ம போடும் முதல் நாளிலேயே ஒரு 'தேசிகராக' முடியுமா? சித்தூர், செம்மங்குடி, அரியக்குடி......ஆண்டுகள் பலவாய்ச் செய்த சாதகத்தின் விளைவாக வெளிக்கு விளம்பரமானவர்கள்!

சொற்பொழிவு ஒரு நாகக் கனி, சொற்போர் ஒரு கொய்யா! மக்கள் சொற்பொழிவை ஆரம்பத்தில் ஆழ்ந்து கவனிப்பர், பிறகு சலிப்படைவர்; நாகக்கனி முதலில் இனிக்கும், பிறகு துவர்க்கும். இறுதியில் தொண்டை கட்டிவிடும்! கொய்யாவைப் போலச் சொற்போர் தொடக்கத்தில் சுவை இருக்கிறது. போகப் போக ஊசி விழுந்தாலும், ஓசைகேட்கிற அளவு நிசப்தம் குடி கொள்ளும்! என்றாலும் பேசுவோரின் நாவன்மை, 'வாயாடித் தனம்' குறைவாக இருந்தால் கூட்டத்திலிருப்போரிடம் அமைதி இன்மையும், 'குசு'—என்ற கூச்சலும், அவர்களுக்குள் 'குட்டி கான்பிரன்ஸுகளும்' நடக்கத்தான் செய்கின்றன! சொற் போரின் சக்தியைப் பாருங்கள்——பேசத் தெரியாத என்னையே ஒரு முறை மேடையிலேற்றி எதையோ 'தத்து, பித்து' என்று உளறவிட்டுக் கைதட்டுதலையும் வாங்கிக் கொடுத்துவிட்டது!

இலக்கியக் கழகம் கல்லூரி மாணவர்கள் அத்தனைப் பேருக் கும் பொதுவான ஒரு கழகம். அதில் கல்லூரி மாணவர்கள் யாவரும் உறுப்பினர். அன்று ஓர்நாள் அக்கழகத்தின் சார்பிலே ஒரு கூட்டம் போட்டிருந்தார்கள். அன்று மாலை எங்கோ சென்று கொண்டிருந்த நான் கூட்டமாக மாணவர்கள் நின்று கொண்டிருப்பதைப் பார்த்து அங்கு சென்றேன். அப்பொழுது தான் "அகரமுதல..." என்று இறை வணக்கம் பாடிக்கொண்டு இருந்தார் ஒரு இசைக் கல்லூரி மாணவர். நான் மூலையிலே இடம் பிடித்து அமர்ந்து கொண்டேன். மாணவர்கள் ஏராள மாகக் கூடியிருந்தார்கள். ஒரே இட நெருக்கடி!

"ஏன் இன்று இவ்வளவு கூட்டம்?" என்றேன் நான்.

"பேசப்போவது பவளவாய், முத்துப்பற்கள், முல்லைச் சிரிப்பு ... ..." என்று சிரித்தார் தோழர் ஒருவர்.

"கூட்டம் கூட்டக் கழக அமைச்சர்களிடம் உள்ள மோகன மந்திரம் ..." என்றொருவர் 'வியாக்யானம்' செய்தார்.

"தலைப்பு என்ன தெரியுமா? காதல் மணம் அவசியமா—இல்லையா? — சொற்போர்! பருவகாலம் பார், பொறுக்கி எடுத்துப் போட்டிருக்கிறார்கள்" அடுத்தவர் விளக்கவுரை இது.

"குறும்புக்காரிகள் ..." ஒருவரின் அர்ச்சனை.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையிலே தலைவர் எழுந்தார். சில வார்த்தைகளை உதிர்த்தார். தலைப்பைக்கூறித் தொடங்கி வைக்க அழகியை அழைத்தார். அவள் எழுந்ததும் ஒரே ஆரவாரம் - கைதட்டுதல்கள்.

"காதல் மணம் கிடக்கட்டும் — காதல் என்றால் என்ன? அதன் உருவம் என்ன? சிங்கத்தலையும், மனித உடலுமா? அல்லது ஆறுதலைகளும், பன்னிரண்டு கரங்களுமா ...? அது அது ஓர் உள்ளப் பாங்கின் விளக்கவுரை, உணர்ச்சிப் பாடலின் பொழிப்புரை அன்புப் பெருக்கின் பதவுரை ...! மாம்பழம் இனிக்கிறது என்று சொல்கிறேன், அந்த இனிப்பை எப்படி விளக்குவது? எழுதிக் காட்டுவது? பல கல் தொலைவு நடந்த தால் என் கால்கள் வலிக்கின்றன என்று சொல்லலாம், அந்த வலி எப்படி இருக்கிறது என்று வார்த்தைகளால் அளந்துவிட முடியுமா? வாயால் வருணித்துப் பிறர் உணருகிற அளவு செய்துவிட முடியுமா?... முடியாது! அதையதை அவரவர் அனுபவித்துத் தெரிந்துக்கொள்ளவேண்டும். அதனால் அகத் துறை பற்றிக் கூறும்பொழுதுகூட இலக்கண வல்லார், தான் துய்த்த இன்பத்தைப் பிறருக்கு எடுத்துக்கூற இயலாததாய்த் தானே எண்ணி யெண்ணி மகிழக்கூடியதாக அமைந்துள்ளது... என்று விளக்கம் கூறுவார்கள். அகத்துறை ஒரு பெரிய இராமா யணம் - காதல் பாலகாண்டம் அதில். உலகத்தில் ஒரு கடவுள் உண்டென்றால் காதல்தான் அந்தக் கடவுள்! மனிதனது அறி விற்கு எட்டாது கடந்து நிற்பதுதான் கடவுள்—காதலும் அப் படித்தான்! காதல் உலகக் கட்டுகள் அத்தனையையும் கடந்து நிற்கும் ஒரு உரிமை வேட்கை — உலகத்து மிக அடிப்படையாக உள்ள இயல்பு ஆண், பெண் கூட்டுறவு ... அந்தத் தேர்தலில் வாக்கெடுப்பில் உள்ள வாக்குரிமைதான் காதல்... என்றெல்லாம் எதிர்தரப்பில் உளறிக்கொட்டப் போகிறார்களே, அவையெல் லாம் காகிதக் குப்பைகள். எழுதத் தெரிந்தவர்கள், தங்கள் எழுத்து வன்மையைக் காட்ட எழுப்பிக்கொண்ட கற்பனைக் கதைப்புகள்.........எனக்குத் துளியும் இதில் நம்பிக்கையில்லை.

நான் யாரையும் காதலித்ததில்லை. ஆனால் எதிர்தரப்பில் நின்று போராடப் போகும் தோழிமார்கள் காதல் வலையிலே சிக்கிச் சிதைகிறார்களோ என்னவோ!

"அரசியல் உலகில் 'ஜெய் ஹிந்த்' என்று சொல்லிக் கொண்டால் நல்லது. வைதீகர் வாழ்வில் எந்தக் காரியத்தைச் செய்தாலும் 'முருகா, கோவிந்தா — —' என்று எதையாவது அடிக்கடி உச்சரித்தபல் அவசியம். அபோல எழுத்தாளர்கள் எதைத் தொடங்கினாலும், எந்த நிகழ்ச்சியைத் தொட்டாலும் காதல் என்ற வார்த்தையை நான்கைந்து இடங்களில் தெளிக்கா விட்டால் அவர்கள் திறமை வெளிப்பட்டதாகாது! இப்பொழுது காதல் எங்கே வாழ்கிறது......வாழவில்லை. நடைப்பிணமாக உலவீகிறது என்றால்......எழுத்தாளர்களின் பேனா முனையில்! நாட்டில் காதல் செத்துவிட்டது. சாக வேண்டியது, 'சாகா வரம்' பெற்று விளங்கும்-? காதல் என்பது உலகத்தில் இருக்க முடியாது. அப்படி இருக்க வேண்டுமேயானால் பலர் பிரமச் சாரிகளாகவே இருக்க வேண்டும். பெண்களிலே பல மணி மேகலைகள் தோன்ற வேண்டும்! இயற்கையாகவே பருவகாலத் தில் ஆணிடமும், பெண்ணிடமும் ஒன்றையொன்று இழுக்கும் சக்தி இருக்கிறது; இது அனுபவ உண்மை! இதைத்தான் காதல் என்று செல்லப் பெயரிட்டழைத்து அந்தத் திருமணம் தேவையென்று வாதாடப் போகிறார்கள் உலகம் தெரியாத வர்கள்!

"காதல் என்று பேசிக் கஞ்சிக்கு வழிதேடவும் முடியாத ஒருவனை மணந்து கொண்டால் ஒரு பெண்ணின் வாழ்வு என்ன ஆவது! கொஞ்சம் பணம் படைத்தவனைப் பார்த்து மணந்து கொண்டால் வாழ்க்கை இனிக்காதா? காதல் என்று தகுதியைத் தள்ளிவிட்டால் இன்பச் சேர்க்கை இருக்குமா? சாதிக்கு 'வக் காலத்து' வாங்கவில்லை. குலத்திற்குப் பரிந்து பேசவில்லை, கோத்திரத்திற்கு வழக்கறிஞனாக வந்து வாதாடவில்லை. ஆனால் ஆண் பெண் சேர்க்கையில் கொஞ்சம் விஞ்ஞானத்திற்கும் இடம் கொடுக்கவேண்டும். உடற்கூறு உண்மை நூலுக்கு வேலை கொடுக்கவேண்டும்! சைவ உணவு உட்கொள்ளும் ஆணும்,

மாமிச உணவு ஏற்று வாழும் பெண்ணும் சேர்ந்து வாழ்ந்தால் அவர்களின் சந்ததி வலுவற்றுப் போகுமாமே! கலியாணத் திற்குக் காதலை மட்டும் அளவு கோலாக்கவேண்டாம். ஆகவே காதல் மணம் அவசியமில்லை. கருத்தோடு பொருத்தமுள்ள ஆணையும், பெண்ணையும் இணைக்கும் முயற்சியிலிறங்குங்கள்.

"தமிழ் நாட்டில் இன்று வாழ்கிற ஆயிர மாயிரங் குடும்பங் களில் குதூகலம் இல்லையா? அவர்கள் காதலால் சேர்ந்து களவொழுக்கத்திலீடுபட்டு, உடன்போக்கைக் கையாண்டவர் களா? இல்லை. பெற்றோர்களின் விருப்பத்தின் பேரில் குறிப் பிட்ட பேரை மணந்து கொண்டவர்கள் தாம்! அன்புதானே நீர் சுரக்கும் ஊற்றுக் கண்; அது எந்த நேரத்திலும் நீர் சுரக்கும்!"

— அழகி இப்படி வாதாடினாள். அவள் வாதாடிய முறை மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது! ஆனால் அடுத்து வந்த பெண்-பெண்ணா அவள், காற்றிலே அசைந்தாடும் பூங்கொப்பு-! அவளுடைய முத்து முத்தான சொற்களால் அழகியினுடைய வாதங்களை நொறுக்கித் துகள் துகளாக அடித்து விட்டாள்!

அவளை நான் என் பார்த்தேன்? ஐயோ.........என் விலா எலும்புகள் நோகின்றனவே! இதயத்தில் ஒரு திடீர் அதிர்ச்சி–! ஆயிரம் எண்ணங்கள் ஒரே நேரத்தில் மனத்தில் புகுந்து பிரஞ்சுப் புரட்சி நடத்துகின்றனவே...! அவள் பேச்சுக்கள் என் செவி களில் எங்கே விழுகின்றன! அவளது அழகிய ஆணித்தரமான மறுப்புக்களைக் கேட்டுக் கையொலி எழுப்புகிறார்களே! என்னால் என் கைகளை அசைக்கவும் முடியவில்லையே! ஐம்பொறிகளும் கண்பொறியாக மாறிவிட்டன! மற்ற நான்கின் உணர்ச்சிகளும் பார்வை உணர்ச்சியாய் மாறிவிட்டன போலும்—!

ஒரு குழந்தை தனது விளையாட்டுப் பொம்மையைத் தொட்டுவிட்டால்கூட அழும்; என் மனமும் அப்படித்தான் அடம் செய்கிறது! அந்தப் பெண்ணை அதற்கு முன் நான் பார்த்ததும் இல்லை. ஆனால் அவளைப் பார்த்த உடனேயே அவள் எனக்கே உரிமையுடைய பொருளாகவே எண்ணச் சொல்கிறது. உங்களுக்குள்ளே உட்கார்ந்துகொண்டு 'ஓட்டா

ரம்' பிடிக்கும் ஒரு உணர்ச்சி அதிபதி! அவள் அழகை அனுப விக்க இந்த உலகில் என் ஒருவனுக்கே உரிமைச்சீட்டு எழுதப் பட்டதாகவே, என் மனம் சொல்லுகிறது! சீதையை இழந்த சோகத்தால் இராமன் அந்நியன் அனுமானிடம் தன் காதல் கிழத்தியின் அங்க அமைப்புகளை அநாகரிகமான முறையில் வருணிப்பதாகக் கம்பன் காட்டினன். அவளை அடைய வேண்டும் என்ற தாகத்தால் நானும் உளறவா? அவளை அடைந்தே ஆகவேண்டும் என்று மௌனமுகாரி வைத்து விட்டது என் மனமெனும் சிறு குழந்தை — ஊமை அழுகை அழுகிறது!

கண்டதும் காதல் என்கிறார்களே, அது இதுதானோ! எழினி சொல்கிற கவர்ச்சியா, அழகி பேசிய பருவகால மன இழுப்பு மாயமா? என்னல் புரிந்துகொள்ள முடியவில்லையே! வழுதிக்குப் பிடித்திருக்கும் அந்த நோய் தொத்து வியாதியா? என்னையும் பிடித்துக் கொண்டு ஆட்டுகிறதா? காதல் ஒரு தொத்து நோய்தான் — ஆனல் கொஞ்சம் விசித்திரமானது! ஒரு சமயத்தில் இரண்டு இரண்டு பேராகத்தான் பற்றிக் கொள்ளும்! மோகம் முப்பது நாள், ஆசை அறுபது நாள் என்கிறார்களே அந்த மோகந்தான் என்னை ஆட்டுவிக்கிறதா? காமம் என்றொரு வார்த்தையைப் பயன்படுத்துகிறார்களே, அது தான் என் மனநிலைமைக்கேற்ற திரு நாமமா?....அது எப்படியோ, போகட்டும் — என் மனத்தில் அந்த எழிலுருவம் பதிந்து விட்டது ஆழமாக பதிப்பித்த சிற்பியின் பெயர் காதலாகட்டும், காமமாக இருக்கட்டும், அதுபற்றிய கவலை எனக்கில்லை!

அவள் ஒரு கொடி, நடையோ தென்றலில் துவண்டாடும் மாந்தளிர் போல! அவள் கூந்தல் நெளி நெளியாக வளைந்து சுருண்டு என் உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டிக்கொண் டிருந்தது! என்னை உடனே இழுத்துப் பம்பரம் போலச் சுற்ற விட்டது. அவளது பிறைச் சந்திரன் போன்ற நெற்றியல்ல, வளைந்த புருவமல்ல, வனப்பை அதிகப்படுத்தும் மூக்கும் அல்ல, உணர்ச்சிக் குவியல்களை அடக்கிக் காக்கும் சுருங்கிய கருங்கோடு கள் நிறைந்த உதடுகள் அல்ல........அவளது கண்கள்! நான்

எழுதிக்குவிக்கும் ஏடுகளில் பெண் வருணனை எங்காவது கொடுக்கவேண்டி வந்துவிட்டால் பெண்ணின் இதழ்கள் அதிகப் பாடுபடும், கண்கள் என் எண்ணத்தை எழுத்தை எல்லாவற்றை யுமே பறித்துக்கொள்ளும்! பெண்ணின் கண்களை ஒரு பல்கலைக் கழகம் என்று கூறியுள்ளேன், பார்வையிலேயே போதையூட்டும் கஞ்சா உருண்டைகள் என்றுகூடச் சொல்லியிருக்கிறேன். பெண் களின் கண்கள் ஒரு சுவையுள்ள நாவல் — என் ஆயுள் முழுவதும் என் இரு கரங்களாலும் அவளது அழகிய முகத்தைத் தாங்கிக் கொண்டு அவளின் கருவிழிகள் கற்பிக்கும் பெருங் கலைகள் யாவையும் படித்துக்கொண்டே இருப்பேனே...! அவள் விழி கள் பிறழும்போது என் இதயத்தை நரம்புகளும், எலும்புத் துகள்களும் இரத்தநீர் ஒழுகவிட்டு அழ அழ, கதறக் கதறக் கொத்தோடு பிடுங்கி இடம் மாற்றி வைப்பது போன்ற ஒரு பிரமை...! 'தோள் கண்டார், தோளே கண்டார்' என்று பாடியதுபோல ஒரு வம்பர் கவி பாடினால் இவளைப்பற்றி, 'கண் கண்டார், கண்ணே ஆனார்' என்று முடிப்பார். ஆம். அவளது விழியழகு என்னை வாட்டுகிறது!

ஆயிரம் ஆயிரம் பெண்களைப் பார்க்கிறேன். பழகுகிறேன். ஆனால் அவளைப் பார்த்தவுடன் ஏற்பட்ட உணர்ச்சி இதுவரை ஏற்படவில்லையே! அதுதான் முதல் தடவை. அதுவே கடைசித் தடவையாகவும் ஆகட்டும்! அவள் நிறத்தைக் கண்டு மயங்கி விடவில்லை. அவள் நிறம் கருமைதான் - மனிதன் நாளும் தொழும் மகேசுவரனுக்கே கருப்பு நிறந்தானே! அந்த நிறம் மாறி விடுமோ என்ற அச்சத்தால்தானே பக்தகோடிகள் ஊற்றக் கூடாத தேன், பால், வாழைப்பழக்குழைவு, இளநீர் ... என்று என்னென்னவோ பொருள்களையும் எண்ணெயுடன் சேர்த்து ஊற்றிக் கருப்பை வளர்க்கிறார்கள், கொஞ்சமும் மாறாமல்! அவள் ஒரு கானக் கருங்குயில்! அங்க வளர்ச்சிக்கென்றால் எத் தனையோ பேரைப் பிரித்தெடுக்கலாம். பேச்சழகென்றால் அழகி யிடமே மயங்கியிருக்கவேண்டும். வள்ளியிடம் உள்ளத்தைப் பறிகொடுக்கவேண்டும். பின்னர் ஏதோ ஒரு சக்தி எனக்கு அப்படிப் புதுவகை மனமருட்சியைக் கொடுக்கிறதே — அதற்

குப் பெயரில்லையா ? இதுவரை என்ன பெயரிட்டழைத்தார்கள் ? அது இடுகுறிப் பெயரா ? காரணப் பெயரா ?

சின்னஞ் சிறுவயதில் தாயின் அன்பு வடிவிலே பெண்மையை உணர்கிறான் மனிதன். பிறகு குழந்தை தெய்வங்கள் சேர்ந்து விளையாடுகின்றன. குழந்தை உள்ளமும், புராண ஆசிரியனின் அறிவும் இரட்டைக் குழந்தைகள் ! ஆகவே அந்த உள்ளத்துடன் பெண்மையைக் கற்பனை செய்கிறான். சகோதரர்களின் அன்பு வெள்ளமும் அவன் அனுபவித்துத் தெரிந்து கொள்கிறான். வயதாகவாகப் பெண்மை பயந்து ஒதுங்கிக் கொள்கிறது—ஆண்மை கோவில் மாடு மாதிரிக் கண்ட இடங்களில் திரிகிறது ! நேற்று வரை என்னுடன் விளையாடிய சரசா என்னைக் கண்டால் ஓடி ஒளிந்து கொள்கிறாள். முன்னெல்லாம் ஓய்வில் சொந்த ஊர் செல்வதென்றால் எனக்கு மகிழ்ச்சி—சரசாவை நினைத்துத் தான் ! ஆனால் இப்பொழுது என்னைக் கண்டு மறைகிறாள்... அவள் மாறி விட்டாளா? அல்லது நான் தான் சிங்கம், புலி, கரடியாகிடும் சாபம் பெற்றேனா ? என்னைக் கண்டு அச்சத்தால் ஓடுகிறாளா ? அலட்சியத்தாலா ? வெட்கத்தாலா ? சமூக சட்ட திட்டத்தின் தூண்டுதலினாலா ? பெண்களைப் பார்க்கும் பொழுது ஒரு மயக்கம் ஏற்படுவதுண்டு. அது நிலைத்து விடுவதில்லை. நீரில் ஏற்படும் குமிழி போல உடனே மறைந்து விடும். ஆனால் அவளைப் பார்த்தவுடன் ஏற்பட்ட உணர்ச்சி அப்படிப்பட்டதல்ல. நிச்சயமாய், சத்தியமாய்...! கவர்ச்சியா இது, காதலா ?

அவள் பெயர் அன்னா...... அந்தப் பெயர் ஏற்கனவே எனக்குப் பிடித்து விட்டது. உலக அறிஞர் டால்ஸ்டாய் தீட்டிய 'அன்னா கரினினா' என்ற ஏட்டைப் படித்தபோது அன்னா என்ற பெயர் என் மனதில் படிந்து விட்டது. அவள் முழுப் பெயர் அன்னா ஆல்பிரட் ! ஐயோ... என் மனம் விவரங் கெட்டது. விவரந் தெரியாமல் விபரீத காரியத்தில் என்னை இறங்கத் தூண்டுகிறது. மனித மனம் பல முறைகளில் துரோகியாகவும், சில தடவைகளில் நண்பனாகவும் இருக்கிறது ! என்னை ஏன் இந்த உணர்ச்சிப் புரட்சியில் இழுத்துவிட வேண்டும்? ஏ மனமே என்னுடன் பிறந்து என்னையே ஏன்

வம்பில் இழுத்துவிட்டு வேடிக்கை பார்க்கிறாய்? உனக்கு இது தகுமா? முறையா? சாதியைக் கடந்து, மதத்தையும் தாண்டி என் வாழ்க்கை மாளிகையை அமைக்க முடியுமா?

அவள் பேசிய பேச்சைக் கேட்க ஆசைதான்—ஆனால் என் மனம் எங்கோ ஒரு நிலைப்பட்டுத் தொழுது கொண்டிருந்தது! அதனால் அவளது வார்த்தைகளை என்னால் கேட்க முடியவில்லை. தொழுகை என்பது மனம் ஒரு நிலைப்படல்—உண்மைத் தொழுகையுடைய பக்தனுக்கு ஆண்டவன் தோன்றுவது போல ஒரு மயக்கம் ஏற்படும். சீர்திருத்தவாதிகளுக்கு ஏற்படும் எதிர்ப்பிற்கு இந்த மயக்கம் தான் ஆதிகாரணம்! அன்னா எனக்குத் தெய்வம். நான் பக்தன்! அதனால் தான் மற்றவை என் செவிகளில் விழவில்லை.

ஆணும் பெண்ணும் கொண்டுள்ள கவர்ச்சி சக்தியைத்தான் காதல் என்கிறோம் என்று எதிர்தரப்பில் வாதிடப்பட்டது...... எதிர்ப்பக்கத்தில் பேசிய தோழியும், அவரது அண்ணனும் சந்தித்துப் பேசும் பொழுது அந்தக்கவர்ச்சி ஏன் மறைகிறது, ஒளிகிறது! அந்தத் தோழி நூற்றுக்கணக்கான மாணவர் களிடையே பழகுகிறபொழுது அத்தனைப் பேர் மீதும் அந்தக் கவர்ச்சி பாய்கிறதா? குறிப்பிட்ட ஒருவர் மீது மட்டும் அத்தகைய மயக்கம் தோன்றி அது ஆயுள் முழுவதும் 'சிரஞ்சீவித்தனம்' பெற்று விடுகிறதே...!—இப்படிக் காதலுக்காகப் பரிந்து வாதாடியிருக்கிறாள் அன்னா!

"நாட்டுத் தலைவர்கள் கேட்கும் சாதியற்ற சமூகமும், அதில் மதவெறியில்லாத மக்களும் இருக்க வேண்டுமானால் காதல் மணம் வேண்டும்"—இப்படி ஒரு காரணம் காட்டினாள்!

பிறகு வள்ளி பேசினாள். எழினியும் பேசினாள். வழுதி பேச்சில் சிறந்தவன். அன்று மேடையேறவில்லை. எனக்குத் தான் பேசத் தெரியாது! இன்னும் சிலர் பேசினர்.

பிறகு தலைவர் தீர்மானத்தை 'வோட்டுக்கு' விட்டார். பெருவாரியான உறுப்பினர்களின் ஆதரவினால் காதல் மணம் அவசியம் என்ற முடிவே உறுதிப் படுத்தப்பட்டது. இறுதியாகக்

கேள்வி நேரம் என்று குறிப்பிட்டுவிட்டுத் தலைவர் தன்னிடத்தில் அமர்ந்தார். இந்த நேரத்தை உறுப்பினர்கள் பலர் வேடிக்கைக்குத் தான் பயன்படுத்துகிறார்கள். சிரிப்பு மூட்டித் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ள ஆபாசமான முறையில் கூட நடந்து கொள்கிறார்கள். அனாவசியமான கேள்விகளை எழுப்பித் தலைவரை வம்புக்கிழுப்பதும் உண்டு. கட்சிக் கோளாறைக் காரணமாகக் கொண்டு குழப்பம் விளைவிக்க ஏதாவது கேட்டு வைப்பதும் பழக்கம். "தலைவர் ஏன் மீசையை எடுத்து விட்டார்?"—இது ஒரு கேள்வி. "மின்சார விசிறி ஏன் சுற்றவில்லை?" இப்படியும் கேட்பர்.

ஒரு தோழர் எழுந்தார். "காதல் மணம் வேண்டும் என்று வாதாடியவர்கள் அதன்படி நடக்கத் தயாரா?"

அவையோர் 'கொல்'லென்று சிரித்தனர்.

"சொல்லியபடி நட, நடக்க முடிந்ததைத் தங்கள் வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டவர்கள் அவர்கள் என்பதைத் தோழர் திடமாக நம்பலாம். வேண்டுமானால் பரீட்சித்துப் பார்த்துக்கொள்ளலாம்!"

தலைவர் தானும் குறும்பர் என்பதைக் காட்டிக் கொண்டார். அப்பொழுது அன்னாவின் முகத்தில் நாணம் எட்டிப் பார்த்தது. வள்ளியின் வதனத்தில் சோக ரேகைகள்......! மற்றவர்கள் அவர்களை உற்றுப் பார்த்தார்கள்.

"காதலை வெறுத்துப் பேசியவர்கள் காதலில் தோல்வி கண்டவர்களா? அல்லது ஏமாற்றப் பட்டவர்களா?"

"இரண்டுமிருக்கலாம்"

பிறகு கூட்டம் கலைந்தது. எல்லோரும் பிரிந்து சென்றனர். எனக்கொரு ஆசை—என்னையுமறியாமல் அவளிடம் தள்ளிக் கொண்டே சென்றது. அப்பொழுது வழுதி சொன்னானே அந்த வார்த்தைகள் என் நெஞ்சில் ஈட்டி பாய்வது போலக் குத்தின. அனுபவமில்லாதவன் என்று கூறினான். அந்த அனுபவம் எனக்கு வேண்டாம் என்று அவனையே கேலி செய்தேன்.

இதோ என்னைப் பிடித்து உலுக்குகிறது...! அவன் சிரிக்கத் தான் போகிறான்! ஆனாலும் அவளிடம் சென்றேன், அவளிடம் நான் அதற்கு முன் பேசியதில்லை. பார்த்தது கூட இல்லை. ஆனால் அவளைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

"அண்ணா......"

"என்ன வேண்டும் தோழரே"

"தங்களின் பேச்சுக்கு என் பாராட்டுதல்"

"அது உங்களுக்குத் தானே சேரும்"

"ஏன்......!"

"நீங்கள் எழுதிய 'காதலும் சாதலும்' என்ற ஏட்டி லுள்ள கருத்துக்களைத் தான் நான் சொன்னேன்!"

"என்னை யாரென்று நினைத்து..."

"உங்களை நன்றாகத் தெரியும்...... கரிபால்டி"

"நான் பாண்டியன்......"

"பாண்டியனின் புனைப்பெயர் அது"

நான் சிரித்தேன். அவளும் சிரித்தாள். அவளது விழிகளை நேரடியாகச் சந்திக்க என்னால் முடியவில்லை. அதற்கு எவ்வளவு காந்த சக்தி! இருந்தாலும் அவளைப் பார்த்துக் கொண்டிருப்ப திலே என் மன எரிமலை அமைதியாக இருப்பது போலிருந்தது.

"தாங்கள் விடுதிக்கு வாருங்களேன். அதிக நேரம் உங்க ளோடு பேசிட ஆவல்—வருவீர்களா?"

"விடுதிக்கா......?"

"பயமா......" அரைச் சிரிப்பு.

"சரி, வருகிறேன், வணக்கம்"

அவள் துரிதமாக விடுதியை நோக்கி நடந்தாள். என் இதயம் என்னை விட்டுப் பிரிந்து ஓடுகிறது...... என் வாழ்க்கையின் இன்ப ஓவியம் இதோ மறைகிறது, மறைந்து விட்டது............! அவள் எனக்கு கிடைப்பாளா?

4

மாலை நேரங்களில் நண்பர்களுடன் கல்லூரியின் அருகிலே உள்ள புகைவண்டி நிலையத்திற்குச் செல்வது வழக்கம். அந்தப் புகைவண்டி நிலையம்தான் அந்த ஊருக்கு 'மெரினா பீச்'. நகரத்திலே உள்ள வாலிபர்களும் வயோதிகர்களும் இரும்புத் தண்டவாளங்களின் இரு ஓரங்களிலும் வட்ட வட்டமாக உட்கார்ந்துவிடுவர். இரவு வெகுநேரம் வரையில் அங்கே சிறு மாநாடுகள் நடந்த வண்ணமே இருக்கும். கல்லூரி மாணவர்களும் அங்கு வருவர். ஆனால் அங்கு நிலையாக எங்கும் உட்காருவதில்லை. பிளாட்பாரம் எத்தனை அடி நீளம், அகலம் என்று அளந்துவிடுவர், ஒரு முறைக்குப் பல முறையாக!

அவர்கள் அங்கு பேசாத பேச்சில்லை—காணாத ஆட்களில்லை! கொஞ்ச நேரம் ஆங்கில விரிவுரையாளர் அரைகுறைப் பிச்சு வருவார். உடனே சர்ச்சில், பிறகு ட்ரூமன், பிறகு பண்டித நேரு——அப்புறம் ஈரோட்டுப் பெரியார், 'வேலைக்காரி' திரைப்பட இராசம்மா, சமையற்கார சங்கரய்யர், பிரின்ஸ்பால் பிரமநாயகம்—என்று பலர் வருவர், போவர். அவர்கள் கொஞ்ச நேரம் சென்னையிலிருப்பர், அடுத்த கணம் மாஸ்கோவுக்குப் போவர், பிறகு டெல்லிக்கு வருவர், உடனேயே லண்டனுக்குப் பிரயாணமாவர், டர்பனில் தங்குவர், வாஷிங்டனில்கூட இறங்குவர்——! அவர்களிடம் அடிபடாத செய்தியில்லை...... ஆனால் கல்லூரிப் பாடங்களுக்கு மட்டும் விதிவிலக்கு கொடுத்து ஒதுக்கிவிடுவர். ஒருவர், இருவர் ஆரம்பித்துவிட்டால் "லெக்சரர் அடித்த போர் பத்தாதென்று நீ இங்கேயும் ஆரம்பித்துவிட்டாயா?" என்று மான்கள் மீது புலி பாய்வது போல ஒரே சமயத்தில் பலர் பாய்ந்து அவர்களை அடக்கிவிடுவர்!

வழக்கம்போல நானும் எனது நண்பர்கள் சிலரும் சென் றிருந்தோம். நண்பர்களில் முதல்வன் தென்னன், பொன்னன் இரண்டாவது, மூன்ருவது கண்ணன் — இவர்கள் என்னை நிழல் போலத் தொடர்வார்கள். இவர்களுக்கு என்மீது அளவுகடந்த பிரியம்—சிறு வயதிலேயே இலக்கிய உலகில் வெகு கம்பீரமாக நடக்கும் வாய்ப்புப் பெற்றுள்ளதைக் கண்டு மகிழ்ச்சிகொண்டு என்னை எப்பொழுதும் அன்பாக, சற்று அதிக மரியாதை யுடனே நடத்துவர். மேலும் என்னைப் பார்த்தால் மிகச் சிறிய வனுகவே இருப்பேன், தோற்றத்திலும், உருவத்திலும் — வய திலுந்தான்! என்னை நாற்பதையும் கடந்த நரைத்த தலையன் என்றெண்ணி ஏமாந்தவரும் உண்டு. சென்ற இடங்களில் என்னை நம்ப மறுத்த வேடிக்கைக் கதைகளும் உண்டு. ஆகவே அவர்கள் என்னைத் தங்கள் சொந்தத் தம்பியைப் போல நடத்துவார்கள்.

தென்னன் ஒரு சீர்திருத்தவாதி — கொள்கை வெறி அவனை ஆட்டிவைத்துக்கொண்டிருக்கும். எப்பொழுதுமே கூட்டம், மாநாடு — என்று கிளம்பிவிடுவான். அவன் காதல் எல்லாம் இதில் அடங்கிவிட்டது. பொன்னன் படிப்புண்டு, அவனுண்டு என்ற ரகம்! கண்ணன் ஆழ்ந்த சிந்தனைசாலி. கலகலவெனப் பேசமாட்டான். சிரிப்புக்கூட அவனைக் கேட்டுப் ‘பர்மிட்’ பெற்றுக்கொண்டுதான் வெளிவரும். பால பருவத்தில் வேற் றுமை தெரியாது விளையாடுகிற சிறுவன், காலம் வரவரப் பெண்மைத் தொடர்பிலிருந்து விலகுகிருன். அதனை நினைக்க வும் முயற்சி செய்வதில்லை, நினைத்தாலும் பருவப் பயிற்சிகளைத் தொடர்புபடுத்த எண்ணுவதில்லை. பிறர் பேசினுலும் வெறுக் கிருன். கடிந்துகொள்கிருன். பிறகு அம்மாதிரிப் பேசுவதைக் கேட்க ஆசைப்படுகிருன். அத்தகைய நூல்களைப் படிக்க ஆர்வம் பிறக்கிறது. பிறகு தானே பேசவும் நினைக்கிருன், கொஞ்சநாள் அச்சம், மேலும் கொஞ்ச நாள் வெட்கம் தடை செய்கின்றன. பிறகு வெளிப்படையாகப் பேசுகிருன். அடுத்தபடியாகச் செயலில் இறங்கிவிடுகிருன் — கண்ணன் பெண்மையைப் பற்றிப் பிறர் பேசினுலும் வெறுக்கும் கட்டத்திலே இருந்தான்.

மாலை ஆறு மணிக்கெல்லாம் ஒரு வண்டி வரும். அந்த வண்டிக்கு வருகிறவர்களில் ஏறுகிற மக்களைவிட, இறங்குகிற பிரயாணிகளைவிட வேடிக்கைப் பார்க்க வருகிற கூட்டம் மிகப் பெரியது—! கல்லூரி மாணவர்கள் 'ரேஷன் ஆபீஸரைப்' போல் 'சர்வே இன்ஸ்பெக்டரைப்' போல ஒவ்வொரு வண்டியாக அலசித்தள்ளிவிடுவார்கள்! அவர்கள் கண்ணோட்டத்தில் தப்பிவிடுபவர் யாருமே இருக்காது. நிச்சயமாகச் சேல் விழி யார் யாரும் மறைந்து சென்றுவிட முடியாது! அழகுக் கூட்டத்தைப் பார்ப்பதே கண்களுக்குக் குளிர்ச்சி; அமைதி குறைந்த மனத்தில் கொஞ்சம் நிம்மதி! நாங்களும் அந்த வண்டியைப் பார்த்தோம். கண்ணன் முனகிக் கொண்டே எங்கள் பின்னால் வந்தான். தென்னன் யாரோ ஒருவர் வந்துள்ளாரா என்று தேடினான். பொன்னன் நேரமாகிவிட்டது, மறுநாள் ஆங்கிலக் கட்டுரை யெழுதக் குறிப்பெடுக்க வேண்டுமென்று துளைத்தான்.

அந்த வண்டியிலிருந்து வீரமணி இறங்கி வந்தான். எனக்கு ஆச்சரியமாகிவிட்டது. அவனைப் பார்த்தே இரண்டாண்டுகளாகி விட்டன. அவனை யார் என்று நினைக்கிறீர்கள்? அவன் ஒரு புரட்சி வீரன். புரட்சி இயக்கத்துத் தலைவர்களிலே ஒருவன். பல முறை அரசாங்க விருந்தினனாக இருந்திருக்கிறான். அவன் ஒரு நாடோடி என்றே சொல்ல வேண்டும். அவன் செல்லாத சிறு இடமும் தமிழகத்தில் இல்லை. அவனை அனைவருமே அறிந்திருப்பர். அவன் என் அறையில் தங்குவான், கல்லூரிக்கு வந்தால்! போன முறை வந்திருந்தபோதே எனக்கு எச்சரிக்கை செய்துவிட்டார் கல்லூரித் தலைவர். மாணவப் பருவத்திலேயே அரசியலில் பங்கு கொள்வதை அறிஞர் பலர் ஒப்புவதில்லை—நல்ல மலரிலே விஷ வாடை அடிப்பதைப் போலக் கருதுகிறார்கள். வீரமணி அப்படித்தான் உயர்நிலைப் பள்ளியிலேயே புரட்சி வீரனாகி விட்டான்!

"வீரமணி——" என்றேன்.

“நான் வருவது உனக்கு எப்படித் தெரியும்? வரவேற்க இங்கேயே வந்து விட்டாயே!” என்றான் வீரமணி ஆச்சரியத்தோடு.

“நான் தேடி வந்தது ... ...” என்று இழுத்தேன்.

“எந்த வீரவனிதாவை” வீரமணி உடனே ஆரம்பித்து விட்டான் குறும்பை!

தென்னன் திரும்பி வந்தான் ஏமாற்றத்தோடு! என் அருகில் வந்து “இன்று வருவதாக எழுதியிருந்தார், வரவில்லையே” என்று பெருமூச்செறிந்தான்.

“யாரப்பா?” என்றேன்.

“அது இரகசியம்!” என்றான் அவன்.

“வீரமணியைத் தேடுகிறீரா?”—வீரமணியே கேட்டான்.

“ஆமாம்” என்றான் தென்னன்.

நான் சிரித்துவிட்டேன். பிறகு வீரமணி என் நெடு நாள் நண்பன் என்பதை விளக்கினேன். தென்னனுக்கு வெட்கமாகப் போய்விட்டது. அப்பொழுது பொன்னனும், கண்ணனும் திரும்பி வந்தனர்.

“அதோ பாரப்பா, வழுதியை ஜோடியோடு” என்றனர் இருவரும்.

நான் பார்த்தேன், வழுதியுடனிருக்கும் மாடப் புறு யாரென்று தெரிந்துகொள்ள! அவள் வள்ளி! எனக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. அவர்கள் பிரிக்கப்பட்ட அன்றில் பறவைகள்! ஆம்! அப்படி எண்ணியிருந்தேன். காதல் சக்கரம் விட்டுவிட்டுச் சுற்றுமோ! அந்த இடை வேளைதான் அன்று வழுதி சொன்ன நிகழ்ச்சியா? காதல் ஒரு போட்டிப் பந்தயம்—ஒரு முறை தள்ளப்பட்ட போட்டியாளன் மறு முறை இடம் பெறமுடியுமா? அது ஒரு வேலை ஊடலா? கூடலே இல்லாதபோது ஊடல் ஏது?

“பாண்டியா—” என்றான் வழுதி.

"உன் ஜோலியை முடித்துக் கொண்டு வாப்பா" என்று சிரித்தேன்.

"இதோ வண்டியிலே ஏற்றி விடுதிக்கு அனுப்பிவிட்டு ஒரு நொடியில் வருகிறேன்" என்று அவசரமாக வெளியில் சென்றான்.

புகை வண்டி நகர்ந்தது. கூட்டமும் தேய்ந்து, கரைந்து மறைந்தது.

கல்லூரியை நோக்கி ஐவருமே நடந்து சென்றோம். வீரமணி வண்டி வேண்டாமென்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான். வழுதிக்கு வீரமணியைத் தெரியும்—மற்றவர்கள் கல்லூரிக்குப் புதுவரவு—ஆகவே எல்லோருக்கும் நானே அறிமுகப் படுத்தினேன். பிறகு வேடிக்கையாகப் பேசிக்கொண்டே சென்றோம்.

"வழுதி, காதல் தொடர்கதையாகி விட்டதா?"

"இடையிலே துவண்டுவிட வேண்டுமா?"

"நீ தானே சொன்னாய்!"

"அதற்குக் காரணங்கள் அவளின் அவசரமும், எனது ஆத்திரமும்"

இப்படி நாங்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்கையில் வீரமணி குறுக்கிட்டான்.

"காதலா? அதை எங்கே விற்கிறார்கள்? யார் அந்த வியாபாரி?"

"அப்படிக் கேளுங்கள் தோழரே, பாண்டியனுக்கு எப்பொழுதுமே காதல் பேச்சுத்தான்—கரிபால்டி பெயரை வைத்துக் கொண்டு நம்மைப் போன்றவர்களுடன் சேர்ந்து உழைக்க மறுக்கிறான்" என்றான் தென்னன் தன் ஆத்திரம் தொனிக்க.

"பாண்டியன் எடுத்திருக்கும் 'ஸ்பெஷல் சப்ஜக்ட்' காதல்—அதை 'ரிசர்ச்' பண்ணப் போகிறார். மார்ச்சிலே 'எக்ஸாமினேஷன்' எழுத வேண்டுமல்லவா?" பொன்னனின் பொன்மொழி இது!

"உனக்கு வேறு வேலை கிடையாதா?" கண்ணன் கடிந்து கொண்டான்.

"தோழர்களே, கொஞ்சம் பொறுங்கள். நாளை நாம் நடத்தப் போவது குடும்பம்—நீங்கள் பெண்களோடு உறவாடா மல் இருக்கப் போவதில்லை. அதைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வோமே! எதையும் ஆராய்ந்து முடிவு செய்து கொள் வதில் தவறில்லை. வீரமணி ஒரு அனுபவக் களஞ்சியம், வாழ்க்கை இரகசியங்கள் அத்தனையும் புதைந்து கிடக்கும் சுரங்கம், அவ னைக் கேட்போம்!" என்றேன் பிரசங்க பாணியில்.

"அது சரி" என்று ஆமாம் போட்டான் வழுதி. மற்றவர் ஒப்புக்காக வாயடைத்திருந்தனர்.

"வீரமணி, காதலை நம்புகிறாயா?"

"காதல் என்ற எழுத்துக் கோவையை நான் வெறுக்க வில்லை. இருக்கட்டும். இலக்கிய பிரமாக்களின் உன்னத படைப்பு காதல்! ஆனால் அது பேசவும், எழுதவுமே பயன்படும். வேண்டுமானால் அடையவேண்டிய இலட்சியச் சொல்லாக வைத்துக்கொள். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்,— என்று பிரஞ்சுப் புரட்சியின்போது சொன்னார்களே. அதுபோல வாழ்க்கைப் போரில் இவ்வார்த்தை அடிபடட்டும். ஆனால் இந் தக் குறிக்கோளில் வெற்றியடைந்து விட்டால் ஒரு மே தினமே கொண்டாடலாம்"

"காதல் வாழ்க்கையின் ஜீவசக்தி என்கிறார்களே" என் றேன்.

"ஜாரின் ஆட்சியும் காதலின் வேகமும் ஒன்று" என்றான் தென்னன்.

"படிப்பும், காதலும் பாம்பும் கீரியும்" பொன்னனின் விளக்கவுரை இது.

"வாலிபர்களின் வெறும் வாய்களுக்குக் காதல் ஒரு பிடி அவல்!" கண்ணன் சொன்னான் இப்படி.

"பாண்டியா, நான் இந்தப் பரந்த உலகத்தில் அடிபட்டு, மிதிபட்டு அனுபவத்தைச் சம்பாதித்து இப்பொழுது அந்த உலகத்தைப் பார்த்துச் சிரிக்கிறேன், கேலியோடு! எனக்குப் பல காதலர்களைத் தெரியும். நானே காதலனாகவும் இருந்த சந்தர்ப்பம் உண்டு. ஆனாலும் இப்பொழுது நான் பிரமச்சாரி—தனித்த கட்டை"

வீரமணி இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் தென்னன் தான் முன்னதாகவே சென்று தோழர்களுக்கெல்லாம் அவனது வருகையைத் தெரிவிப்பதாகச் சொல்லி நடந்தான். பொன்னன் படிக்கவேண்டும் என்று அவசரப்பட்டு ஓடிவிட்டான். கண்ணனும் எங்களைத் தனியே விட்டு நகர்ந்தான். நாங்கள் மூவரே இருந்தோம். மனம் விட்டுப் பேசிக்கொள்ள நல்ல வாய்ப்பாக இருந்தது.

"வீரமணி, உண்மையைச் சொல்கின்றேன். எனக்குக் காதலில் நம்பிக்கையிருக்கிறது"

"எவளாவது உன்னை மயக்கி விட்டாளா?"

"மீனாட்சிபுரமா——?"

வழுதி என்னைப் பார்த்து வெற்றிச் சிரிப்புடன் இந்தக் கேள்வியை வீசினான். அவனுக்கு எப்படித் தெரியும்? நான் அன்னாவை விரும்புகிறேன் என்ற உண்மையை அவன் கண்டு பிடித்து விட்டானே! அவள் ஊர் மீனாட்சிபுரம். அதைக் குறிப்பிட்டுத்தான் என்னைக் கேலி பேசினான். வழுதிக்குக் கம்பி இல்லாத தந்தியாக இருந்தாள் வள்ளி. பெண்கள் விடுதியில் நடப்பதை அவள் சொல்லி விடுவாள். எங்கள் விடுதியில் நடக்கும் சம்பவங்களை அப்படியே படம் பிடித்துக்காட்டி விடுவான். அன்னா என் இதய அரங்கத்தில் நடனமாடுவதை அவன் கண்டுகொண்டதில் ஆச்சரியமில்லை. அவன் அன்றொரு நாள் சொன்னானே நான் அழஅழ அவன் சிரிக்கப் போவதாக—அதைச் செய்து விட்டான்!

"அது கிடக்கட்டும், உன் சொந்தச் சங்கதியைச் சொல்லப்பா"

"அன்று சொன்னேனே என்னை விரட்டி விட்ட துயரக் கதையை! பிறகு இரண்டொரு தினங்கள் கழித்து என்னை வழுவில் அழைத்தாள். நான் போகவில்லை. என்னை மன்ருடி வேண்டிக்கொண்டாள். அப்பொழுதும் அசைந்து கொடுத்து விடவில்லை——பிறகு போனேன். தன்னை மன்னிக்கும்படி வேண்டினுள். தனது தவருன போக்கை மறந்துவிடவேண்டும் என்று கண்ணீர்விட்டாள். எனது இருகிய மனம், அவளது கண்ணீரால் மீண்டும் இளகிவிட்டது. பெண்ணின் கண்ணீர் ஆணை அடக்கியாளும் ஆயுதம்! மின்னலுக்குப் பின் இடி என்பதைப்போலக் கண்ணீருக்குப் பின் ஆணின் நிபந்தனையற்ற சரணுகதி நிச்சயம்! பெண்ணின் வெற்றிச் சங்கநாதம் கண்ணீர்! பிறகு நான் அவளின் அடிமையாகிவிட்டேன். என் காதல் மீண்டும் கொழுந்துவிட்டு எரிகிறது"

"உன்னுடைய எதிர்காலம் என்ன?"

"வள்ளிக் கணவனுகப் போகிறேன்."

"முடியுமா?"

"என்னிடம் காதல் இல்லாவிட்டால் அவள் ஏன் மீண்டும் அழைக்கிருள்?"

இப்பொழுது விரமணி பேசினுன். "தோழரே, காதல் ஒரு மனமயக்கம்—மூன்றேமுக்கால் நாழிகை தங்கும் மந்திரவேலை! அவள் உங்களை என்ருவது காதலிப்பதாகச் சொன்னுளா?"

"நேரடியாக இன்னும் இல்லை"

"அன்பரே, உமக்குத் தெரியாது. பெண்ணின் உள்ளம் மயில் கழுத்து. அதன் நிறத்தை நம்மால் கண்டுபிடிக்க முடியாது. இப்படித்தான் முன்னொருமுறை ஒரு சம்பவம் நடந்தது. அரசியல் வானத்தில் என்னோடு பறந்துவரும் புரு...... அவர் படிக்கும்பொழுது உடன் பயின்ற தோழியிடம் உள்ளத்தைக் கொள்ளை கொடுத்தார். அவளும் அவருடன் அளவுகடந்து நெருங்கிப் பழகினுள். விடுதியில் அவர்கள் மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருப்பார்கள். மற்ற மாணவிகளின் கண்களில்

அவர்கள் மனோன்மணி-புருடோத்தமனாகவே காட்சியளித்தனர்! பிறகு நேரடி நடவடிக்கை எடுத்தபோது சகோதர முறை கொண்டாடி விட்டாள்.''

''அப்படியல்ல, என் வள்ளி. அவள் என்னை உயிராகப் பாவிக்கிறாள். அவள் ஒரு தங்கச் சுரங்கம்—காதல் என்ற தங்கப் பாளத்தைத்தான் தருவாள். சகோதர அன்பு என்ற நிலக்கரி நிச்சயம் இல்லை! அவள் பேச்சு, பார்வை, செயல்...... இத்தனையையும் ஆராய்ந்து சொல்கிறேன்.''

''வெளி நிலைமையைக் கொண்டுதான் லிக்னைட் கிடைக்கும், தானே நீர்பாயும் செய்கிணறுகள் செய்யலாம் என்றுதான் நிலத்தைக் குடைகிறார்கள் இயந்திரம் கொண்டு, அவர்கள் சாதாரணக் கிணறும் வெட்ட முடியாத பாறையைக் கண்டு ஏமாறுவதில்லையா?''

நான் கலப்பு மணந்தான் செய்யப் போகிறேன், உங்கள் மணத்தை நானே நடத்துவேன் என்றாளே ஒருமுறை......''

''நட்பு காரணமாக இருக்கலாம்''

''பந்தலில் என் பக்கத்திலமர்ந்தா—என்று வினவியபோது அவள் தலையை தாழ்த்தினாளே நாணத்தால்''

''இருக்கலாம், அது பெண்ணின் இயற்கை. அதைக் கொண்டே எப்படி முடிவிற்கு வருவது?''

''காதல் ஒரு சூதாட்டம். அதில் வஞ்சனை தெரிந்தவர்களே வெற்றி பெறலாம். தூய்மை, நேர்மை, நீதி, நியாயம்......என்று பேசிக் கொண்டிருந்தால் தருமோபதேசந்தான் வரவாக இருக்கும், ஏமாற்றந்தான் இலாபமாக முடியும்! தோழரே இந்த எண்ணம் உள்ளவர்—பச்சையாகச் சொல்கிறேன்—அவளுடன் தசைத் தொடர்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும். எச்சிற்கனியாக அக்கன்னியை மாற்றிவிட்டால் நீர் எதையும் நம்பலாம்''

''நான் அதை வெறுக்கிறேன் மனதார''

"அனுபவமில்லாத அப்பாவி—ஏமாந்துவிடுவீர், எச்சரிக்கிறேன். பெண் உள்ளம் இளகிய களிமண்ணைப் போல. இப்பொழுது அப்பெண்ணுடன் பழகுவதால் அந்த மண்ணைக் கொண்டு காதல் பொம்மை செய்யலாம். அது ஈரங்காயாமல் இருக்கும் அதையே இன்னொருவன் மாற்றியமைத்து விடலாம். அதனைத் தசைப் பசி என்ற தணலால் சுட்டு, மாற்றமுடியாத பொம்மையாக்க வேண்டும்"

"மணப்பதற்கு முன்..."

"மணப்பதற்கு முன் செய்யவேண்டிய சடங்கு அது—அதுவும் சாதியைத் தாண்டி, பெற்றோரின் எதிர்ப்பையும் கடந்து போராட மன உரம் இந்தச் சாதாரண பேச்சுத் தொடர்பில் ஏற்படாது. அந்த இணைப்பிருந்தால்தான் எதையும் தாங்கும் இரும்பு இதயம் இருவருக்கும் வரும்."

"அவள் தவருக எண்ணமாட்டாளா?"

"உம்மை அவள் விரும்புகிருள்—ஏன்? பேசிக்கொண்டே இருக்கவா? விருப்பத்தின் கடைசி எல்லை அது! பிறகு வேறு ஒருவர் அவளிடம் நெருங்கவும் முடியாது. வேண்டுமானுல் பந்தயம் வைப்போம். நான் அவளுடன் ஒரு திங்கள் பழகினுல் அவள் மனதை மாற்றி என்பக்கம் இழுத்துவிட முடியும். காவியத்துக் காதலை வைத்து அளந்து கணக்கைத் தப்பாகப் போட்டு வாழ்க்கைத் தேர்வில் தோற்றுவிடாதீர். பெண் மனம் என்ற தரிசு நிலத்தில் புகழ்ச்சி, போற்றுதல், தூக்கிப் பேசல், பாராட்டுதல் ஆகிய எருக்களைப் போட்டுச் சந்திப்பு என்ற நீர் பாய்ச்சினுல் காதல் விதையாகட்டும், காம விதையாகட்டும் தெளித்து விடலாம். உடன் முளையும் கிளம்பிவிடும்!—காதல் என்ற புத்தகத்தின் மேலட்டை தசையாசை!"

"பெரிய தத்துவ ஞானியல்லவா நீ—காரல் மார்க்ஸும், லெனினும் இதையா சொல்லிக் கொடுத்தார்கள்?" என் இடைச் செருகல் இது.

"அனுபவ மார்க்ஸ் என் மனத்தில் எழுதிவைத்த அருமையான முடிவுகள்! பெரிய இடத்துப் பெண்ணொன்று என் தோழர் ஒருவர் உண்மைக் காதலால் உளம் உடைந்து விட்டார். அவர் அஞ்சி அஞ்சிப் பழகியபோது எங்கிருந்தோ ஒருவன் வந்து மூன்று மாதங்களில் அவளை மணந்துகொண்டு விட்டான். காத்திருந்தவன் பெண்ணை.........கொண்டுபோய் விட்டான்! ஆகவே பயப்படாமல் அவளைக் கேளுங்கள். தன்னழகில் மயங்கி விடுவதைக் கண்டு பெண் பூரிப்படைவாள். ஒவ்வொரு பெண்ணிடமும் என்னை மணக்கிறாயா என்று கேட்டவரும், சமயம் நேருகிறபோது சல்லாபத்திற்கிழுத்துத் தோற்றவரும் ஏராளம். அதனை அவர்கள் வெளியில் சொல்லமாட்டார்கள்! ஓய்வு நேரத்தில் புரட்டிப் பார்த்துவிட்டுப் பிறகு கண்ணாடியில் நின்று தங்கள் கவர்ச்சிகரமான வனப்பைப் பார்த்துப் பெருமைப் படுவர்!"

வள்ளி, வழுதி என்ற இடத்தில் அன்னையையும் என்னையும் நிறுத்தினால்—இணைந்தால் இனிப்பான எதிர்காலம்—இணைப்புக் குலைந்தால் என்றால் அந்தப் பிரிவைச் சமாளிக்க முடியாது! என் இதயம் தாங்காது இந்தக் காதல் பிளவெனும் பெரும் பாரத்தை! ஐயோ காதல் பாதையில் நடக்க இவ்வளவு சூதுகளும், சூழ்ச்சிகளும் செய்ய வேண்டுமா? காதல் வெற்றி யென்பது வளையல் ஒலியிலும், சேலை அசைவிலும் மட்டும் இல்லை, வேலி பாய்தலிலும், இருட்டறைச் சம்பவங்களிலும், சமயம் நேர்கிற பொழுது வெட்டிலும், குத்திலும், வெடிகுண்டிலும் இருக்கிறது!

5

குமரிக் கோட்டத்துப் பணிமகன் என்னை நாடிவந்தான். அவன் பெயர் கண்ணுசாமி. கண்ணுசாமிக்கு ஏக தடபுடலாக வரவேற்பு இருக்கும், எங்கள் விடுதியில்! அவனைத் 'தலையில் வைத்துக் கூத்தாடும்' காரியவாதிகள் ஏராளமாக உண்டு. கண்ணுசாமி பெரிய மலையாள பகவதி! இந்த ஆணழகர்களின் கோணல் சேட்டைகள் அவனுக்கு வெறுப்பைக் கொடுத்தாலும் சிரிப்பாலேயே சீர் செய்துகொள்வான். 'சும்மா ஆடுமா, சோழியன் குடுமி' என்ற பழமொழி அவனுக்கு மனப்பாடம்! அவன் என்னிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றான்.

அம் முடங்கலைப் பிரித்தேன். படித்தேன்—கடிதம் முடிவதற்குள் யார் எழுதியிருக்கிறார்கள் என்று பார்த்துவிடத் தூண்டிற்று என் மனம். கையொப்பம் 'அழகி' என்று போடப் பட்டிருந்தது. ஆச்சரியம் என் முகத்திலே எழுந்து கூத்தாடிற்று! பிறகு முதலிலிருந்து படிக்கத் தொடங்கினேன். 'அன்புள்ள அண்ணா ... ...' என்று தொடங்கியிருந்தது.

அழகி சிலோன் சிங்காரி — யாழ்ப்பாணத்துத் தமிழச்சி! அழகி உண்மையிலேயே அழகி, அலங்காரி! சரசகலாவல்லி! அவள் எல்லோருக்கும் தெரிந்த 'மோகனமுகம்'! ஆகவே நான் அறிந்திருந்ததில் வியப்பில்லை. அவள் எனக்கு முடங்கல் தீட்டியதில்தான் வியப்பிருக்கிறது! அவள் ஏன் எழுதினாள், என்ன எழுதினாள்?

அது ஒரு சோகக் கதை — எழுத்தாளர்கள் வழக்கமாக எழுதும் 'டிராஜடி'! அவள் கூடாத கூட்டுறவால் ஒரு குழந்தைக்குத் தாயாகும் தகுதியும் பெற்றுவிட்டாள். அதற்குக் காரணம் எழினியாம்! இப்பொழுது கைவிட்டுவிட்டானாம். திரும்பியும் பார்ப்பதில்லையாம். தேன் உண்ட பின் வண்டு

அந்த மலரை நாடுமா? நீரிழந்த வாயில் எட்டியும் ஆம்பலும் போலவா இருப்பான்? அவன் என் தோழன் — ஆகவே என் உதவியை நாடியிருந்தாள், அன்று மாலே வந்து சந்திக்கும்படி என்னை வேண்டியிருந்தாள். நான் போவதா? வீரமணியின் உபதேசம் எவ்வளவு வேதனையும் விபரீதமும் கலந்தது ... . அப்பப்பா ... எவ்வளவு எண்ணக் குழப்பங்கள், உணர்ச்சி எரி மலே வெடிப்புகள்! அப்படிப் போய் அவளுக்கு உதவி செய்ய முடியுமா? எழினி காதலனு? காதகனு? கவர்ச்சியாளனு?

நான் சென்றேன். என் வரவிற்காக இருவர் காத்திருந்தனர். அழகியோடு அவளும் இருந்தாள்—அவள்தான் என் அன்னு, எனக்கே உரியவளாக நான் கனவு கண்டுகொண்டிருக்கும் அன்னு —! எதிரில் போடப்பட்ட நாற்காலியில் அமர்ந்தேன். அன்னுவே தொடங்கிவைத்தாள் அந்தத் துயர நாடகத்தை!

"தங்கள் தங்கைக்கு இந்தக் கதி வந்தால் என்ன செய்வீர் களோ அதையே இப்பொழுது செய்யும்படி வேண்டுகிறேன்".

"அழகியின் தத்துவம் கவர்ச்சி, இப்படி ஆக்கிவிட்டது. சற்று அடங்கி இருந்தால்"

"அண்ணு, அது என் முட்டாள்தனம். நெகிழ்ந்த உணர்ச்சி ... அதற்கு ஆயிரம் முறை மன்னிப்புக் கோருகிறேன்"

அழகியின் கண்களிலே நீர் வடிந்தது. அவளேப் புண்படுத் தக்கூடாது என்று முடிவு செய்துகொண்டேன்.

"தவறுவது மனித இயல்பு. தவறிவிட்டாய், வருந்து வதில் பயனில்லே. எழினியைச் சந்திக்கிறேன். அவனே என்ன செய்யச் சொல்கிருய் என்பதை மட்டும் சொல்லிவிடு"

"என் தாயின் முகத்தில் எப்படி விழிப்பேன்! தந்தை யற்ற என்னை இவ்வளவு தூரம் படிக்கவைத்ததே கடினம் .... அதிலும் படிக்க வந்த நான் பாலனுடன் செல்வதா? பட்டம் பெற வந்த நான் விபசாரி என்ற விருதுடன் திரும்புவதா? எப் படியும் அவர் என்னை மணந்துகொள்ள வேண்டும். அப்படி யானல் என் தாயை ஓரளவு திருப்தி செய்யலாம்."

O-,3x1v1,K N53

அழகி தயங்கி தயங்கி சொன்னாள். அன்னா அவளுக்கு ஆதரவாகவே தொடர்ந்து சொன்னாள்.

"ஆண் காதலை ஒரு காண்டமாகப் பாவிக்கிறான். பெண்ணோ அதனை முழுக் காவியமாகவே எண்ணுகிறாள். கொண்ட கொள்கையைக் கடைசி வரை நின்று முடிப்பவன் வீரன்—அந்தக் கோழை எழினிக்கு எடுத்துச் சொல்லுங்கள்!"

"அன்னா, கொண்ட கொள்கையை நிறைவேற்ற வீரம் தேவை, விவேகம் தேவை! அந்தப் பண்புகளை எல்லோரிடமும் எதிர்ப்பார்க்க முடியாது!"

"பாண்டியர்கள் சிலராவது கிடைக்காமலா போய்விடுவர்!"

"அன்னாக்கள் ஒத்துழைத்தால் நாட்டிற்கு ஒரு படிப் பினையை நடத்தியே காட்டலாம்!"

அன்னா தன் முல்லைச் சிரிப்பைக் காட்டினாள்—அந்தோ, அந்தச் சிரிப்பு என்னைச் சித்திரவதை செய்கிறதே, அவளின் எழில் முகம் எனக்கு இன்பப் போதையை அல்லவா கொடுக் கிறது! அழகி தன் ஆறாத் துயரையும் மறந்து புன்முறுவல் பூத்தாள். அவளுக்கு ஆறுதல் மொழி கூறி நேரே எழினியைச் சந்திப்பதென்ற முடிவுடன் கிளம்பினேன்.

எழினி ஒரு வஞ்சகன்—அதனால் காதலையே குறை கூறி னான். இந்த மாதிரி பெண்மையின் இன்பத்தைக் களவாடிக் கொண்டு ஓடி விட்டான். சமூகத்தில் பொன்னை, பொருளைத் திருடி விட்டால் சிறை வாசம் உண்டு. ஆனால் இந்தக் காதல் நாடகத்தில் திருட்டுக் கொடுத்தவளே சிறை வாசம் அனுபவிக் கிறாள்! பாவம், பரிதாபம் அவள் நிலை—காதலுக்கு பெயர் கவர்ச்சியாம்! மகா மேதாவி, காமத்திற்கு இலக்கியமாகிவிட்ட கள்ளன்! பருவ நரம்புகளின் படபடப்புத் தான் காமம்—அதன் விளைவு தான் அழகி அவல நிலைக்காளானாள்! கவர்ச்சி யென்று சொல்லி ஒரு கன்னியின் கண்ணீரைப் பெருக்குகிறான்... இருக் கட்டும், அவனையே கேட்போமே—என்ன சொல்வான்?

105680

எழினி எதிரில் வந்தான். தேடிப்போன மூலிகை காலில் இடறியது போல அவனே வந்து விட்டான்.

"வாப்பா, துஷ்யந்தரே !"

"என்ன புதுப் பெயர் சூட்டுகிருய் ?"

"உன் கவர்ச்சி விவகாரம் எப்படி இருக்கிறது?"

அவன் முகம் விகாரமாகி விட்டது. எனக்கு எல்லாந் தெரிந்து விட்டது என்பதை ஓரளவு புரிந்து கொண்டான் போலும்! ஆகவே அவன் ஒளிக்காமல் பேசத் தொடங்கினுன்.

"அழகியைப் பற்றித்தானே பேசுகிருய்? ஒரு பக்கத்து நியாயத்தோடு என்னைத் தாக்காதே! இதைக் கேள். எனக்கும் அழகிக்கும் உள்ள தொடர்பு நிச்சயமாய்க் கவர்ச்சி—காதலே அல்ல! காதல் என்ருல் இரு சக்கரங்கள் உள்ள தேரல்லவா? அவளுக்கு என் மீது உள்ளபடி நீ சொல்கிற காதல் தான்—ஆனுல் என்னைப் பற்றிய மட்டில் கவர்ச்சி என்ற வார்த்தை தான் பொருத்தம். ஒரு பருவமுள்ள பெண் என்னிடம் வலுவில் மயங்கினுல் ஒதுங்கிவிட முடியுமா? ஆகவே பழகி னேன். ஆகவே ஒரு சக்கரத்தில் குறையிருக்கிறது என்பதை உணர்ந்து கொள்"

"ஆமாம், என் பெற்ரேர்களை எதிர்த்து என்னுல் இந்தக் கலப்பு மணத்தை நடத்த முடியாது. அப்படி நடத்தினுல் சொத்து போகும், சுகம் போகும்!"

"சுகம் எப்படியடா போகும், சுகம் உன் பக்கத்திலிருக்கும் பொழுது!"

"மன்னிக்க வேண்டும்—பாண்டியா, எவருடைய உபதேசத் தாலும் என்னை அந்தப் புரட்சிப் படி வரை இழுத்துச் செல்ல முடியாது! சூழ்நிலை அப்படி—தொந்தரவு செய்யாதே... அமாவாசை இருட்டில் ஒளியை எதிர்பார்க்காதே, கள்ளிக் காட்டில் சந்தன மணம் கிடைக்காது......! வைதீகமே உரு வெடுத்த குடும்பம்—பணத்தாலேயே என்னை அடித்துக்

கொன்று விடுவார்கள். அவர்கள் குடும்பத்தின் கௌரவம் கெடுமானால்!''

"இப்படிப்பட்ட கோழை ஒரு பெண்ணின் மானத்தைப் பறிக்கலாமா?''

"பாண்டியா ஆத்திரப்படாதே. அதுவும் தவறு...... புதுவைக்கு அவளே வருவதாகப் பிடிவாதம் செய்தாள். அழைத்துச் சென்றேன். சந்தேகக் கண்களுடன் ஓட்டல் மானேஜர் பார்த்தான். அவளே துணிந்து சொன்னாள்—அவரின் மனைவியென்று! பிறகு நான் கணவனாக நடக்காவிட்டால் 'கூத்தாண்டவர் கூட்டம்' என்று நீயே கேலி செய்ய மாட்டாயா?—அதன் விளைவு இன்று அவள் தாய்—நான் துரோகி!''

"எழினி உன் நெஞ்சிலே கொஞ்சமும் இரக்கமில்லையா? அவளின் கதியை எண்ணிப்பார். அவளின் எதிர்காலத்தின் பயங்கரம் உன் சிந்தனையில் படவில்லையா? பேதைப் பெண்ணின் மீது இரக்கம் காட்டு. நம் நட்பின்மீதாணையாகக் கேட்கிறேன்—காதல் மீது கேட்கா விட்டாலும்''

"என்னை வாட்டாதே, விட்டுவிடு!''

"வாட்டவில்லை — மலர்த்தோட்டத்திற்குப் போ என்று தான் சொல்கிறேன்''

"ஐயோ—பாண்டியா, உன் ஈட்டிப் பாய்ச்சலை என்னால் தாங்க முடியவில்லையே! என் மனத்தைப் புண்ணாக்கிப் போடாதே! என்னை விட்டுவிடு—உன் நியாயங்கள் எனக்குப் புரிகின்றன—ஆனாலும் என் நிலைமை மறுக்கிறது. சங்கடமான சிக்கல்—சரி செய்ய முடியாத பிரச்சினை. நான் வருகிறேன். அழகியை மன்னிக்கும்படி கேள் என் சார்பாக!''

அட பாவி — போய்விட்டானே! எழினி என்னிடம் விடை பெறாமலே நடந்து விட்டான்...நடந்து விட்டானா? ஓடியே போய்விட்டான்! காமத்தின் திருக்கூத்தைப் பார்த்தீர்களா? காமம்-கணநேர இன்ப வெறியாட்டம்! அதன் கோர

விளையாட்டை என்றால் சகிக்க முடியவில்லை. இந்தச் சிறு பொழுது தித்திப்பு உணர்ச்சிக்கு—எவ்வளவு கொலைகள்—எவ்வளவு வேதனைக் கதைகள்—எத்தனை அபலைகளின் அழுகை—எத்தனை அழகிகள் பலியிடப்படுகிறார்கள்! காமத்தின் காரணமாக எத்தனை சாம்ராஜ்யங்கள் சரிந்தன—எத்தனை வீரர்கள் வீணர்களாயினர்—எத்தனை சோதாக்கள்-சுகவாழ்வு பெற்றனர்?

ஏ காமமே... நீ யார்? நீ எங்கிருந்து உலகத்தில் நுழைந்தாய்? யார் உன்னை அனுப்பியது—? உன் ஆட்சியின் முடிவு காலம் அண்மையிலா?—சேய்மையிலா? காமமே, நீ மனிதக் கூட்டினுள் மறைந்து நின்று சமயத்தில் எழுந்து ஓடும் உணர்ச்சி ஊற்று, நரம்பு தாகம்—உன் வேகம் அடங்கச் சிறு பொழுதே தேவை—ஆனால் அதற்குள் எவ்வளவு 'பேயாட்டம்' ஆடி விடுகிறாய்! நீ ஒரு பெருநோய்—உன்னை அடக்கப் பெண்மையின் கற்பு, ஒழுக்கம், நெறி, நியாயம் அத்தனையும் கரைந்த மருத்துவ நீர் தேவை! நீ புரிந்துகொள்ள முடியாத புதிர்... ஆனால் உன்னைப் போட்டியிலே விடாத பேர்களில்லை—ஆனால் பரிந்து வெடித்தவர் எத்தனை பேர்? காமமே, உனக்கு அந்திய காலம் எப்பொழுது? சாவோலை தீட்டும் நாள் எந்நாளோ? அந்நாள் இந்த உலகம் அழியப் போவதாகச் சொல்லும் ஊழி காலத்தின் கடைசி நாளா? உன் மரணத்தின் மங்களகரமான சுப சேதியை மக்கள் நாளும் எதிர்பார்ப்பார்களாக!

காமம் எங்கே! காதல் என்ற புனித உணர்ச்சி எங்கே! காதல் என்ற தெளி நீரைக் குழப்பி மடுவாக்க வந்த மேதி—எருமைக்கடா காமம்! இரண்டையும் ஒப்பிட முடியுமா? காதல் பெருவெள்ளம், காமம் இன்ப வேட்கையெனும் சிறு துளி! காமம் சிறுபொறி—உடனே அவிந்துவிடும், காதல் பெருந்தீ—நிலையாக எரிந்துகொண்டே இருக்கும்! காமம் 'டெம்பரவரி', காதல் 'பர்மனெண்ட்' வேகம்—! இது முளையிலே கருகிவிடும், அது மரமாகியும் பட்டுப்போவதில்லை! இது வாழை—இன்ப நுகர்ச்சி என்ற தாரைப் போட்டதும் மடிந்துவிடும்! அது ஆலமரம்—பல விழுதுகளைப் பெருக்கி இன்னும் உறுதியாக்கும்! இது அடிக்கரும்பிலிருந்து நுனிக்கரும்பைச் சுவைத்தல்—அது நுனியி

விருந்து அடிக்குப் போகும் நிதான சுவைப்பு! காதல் பெருங் கடல்—நிலையான இன்பம் எனும் உப்பு குறையாமலிருக்கும்! காமம் கடலோரம் ஓடும் உப்பங்கழி—சில சமயம் உப்பாகும், பிறகு மாறும்! பாறையிலே வெப்பம் வெகுவிரைவில் ஏறி விடும் ஆகவே அது விரைவிலே விட்டு விடும்—நீரில் சூரிய வெப் பம் வெகுபாடுபட்டே சேரும் — சேர்ந்த பிறகு வெளியேறவும் வெகுகாலம் பிடிக்கும்-காமமும், காதலும் இப்படியே! காமம் செத்த இடத்தில் காதலுக்கு அரியாசனம்அமைப்பார்களா!

என் ஆத்திரம் அடங்கவில்லை. ஆத்திரத்தைக் கொட்டி அளக்கவேண்டும் என்ற அவா. எப்பொழுதுமே ஆத்திர மானாலும், ஆனந்தமானாலும் பிறரிடம் சொல்லிவிட வேண்டும் என்ற மனத் துடிப்பு மனித இயற்கை! அப்படிச் சொல்லும் பொழுது ஆத்திரங் குறையும், ஆனந்தம் பெருகும். இது கண் கூடான உண்மை! நேற்று வந்த வீரமணியை மீண்டும் சந்திக்க வில்லை. ஆகவே அவனைச் சந்திக்கலாம் என்று சென்றேன்.

வீரமணியின் பக்கத்தில் தென்னன் உட்கார்ந்திருந்தான். அவர்களது புரட்சிக் குழு வெளியிட்ட துண்டு வெளியீடு களையும் — பகிரங்கக் கடிதங்களையும் — அவனிடம் காட்டிக் கொண்டிருந்தான். நான் நுழைந்தவுடன் தென்னன் அன்போடு வரவேற்றான். வீரமணியும் சிரிப்பால் என்னை இழுத்தான் அவன் பக்கத்தில்!

"தோழருடன் பேசிக்கொண்டிரு — டிபன்கொண்டு வரு கிறேன்" என்று தென்னன் மாணவர்கள் உணவு உண்ணும் விடுதியை நோக்கி நடந்தான்!

"வீரமணி, நீ பெரிய புரட்சிக்காரனாயிற்றே......பெண்கள் இந்த உலகில் உரிமையோடு வாழ முடியாதா? அவர்களுக்குச் சமத்துவங் கொடுப்பதாகச் சொல்வதெல்லாம் வெறும் பித்த லாட்டமா?"

"பாண்டியா — ஏன் இவ்வளவு பதட்டம்! அவசரப் படாதே. நிதானமாக இரு — சொல்கிறேன். இந்தப் பரந்த உலகத்தை இன்னும் புரிந்துகொள்ளவில்லை நீ. உலகம் ஒரு

சர்வகலாசாலை. அதில் படித்துப் பட்டம் பெற்றுவிட்ட பின்னர் தான் நீ வாழ முடியும்! இப்பொழுது வாங்கப் போகிற பட்டம்—தேக்கஞ் சட்டந்தான்! மனிதனின் வாழ்விலே மாணவப் பருவம் வசந்த காலம் — கவலையற்ற இன்பவேட்டை! இப்பொழுது உலகம் உன் கண்களுக்குத் தெரியாது''

''நேரடியான பதில் தேவை, வீரமணி''

''உண்மையில் பெண்கள் உரிமையோடு வாழ அவர்களின் உடற்கூறே எதிரியாக இருக்கிறதே! வெளியுலகில் சென்று பயமின்றி வாழ முடியாதே! என்னைக் கேட்டால் ஒரு தீவிரமான முடிவு சொல்வேன்! பெண்குழந்தை பிறந்தால் பெண்கள் பிரசவ வேதனை யேற்பதும், ஆண் குழந்தையானுல் ஆண்கள் பிள்ளை பெறும் பொறுப்பை யேற்பதும் இயற்கை விதியாக மாறும்வரை ஆணுக்குப் பெண் அடிமையாகத்தான் வாழ முடியும் — வாழ வேண்டும்!''

''இந்தத் தடங்கலைப் படிப்பு தரைமட்டமாக்கி விடாதா?''

''படித்த பெண்கள் மட்டும் தங்கள் பெண்மைப் பண்புக்கு இரும்புக் கவசமிட்டுவிடவில்லையே! அவர்களும் 'சல்லித் தனமான சில்லறைச்' செயல்களில் சிக்கிச் சிதைந்து விடுகிருர்கள். இதே கல்லூரியில் ஒரு பெண், அவள் பெயர்... அவள் தன் ஆசைக் காதலனைத் தன் அறைக்கு அழைக்கச் சேலை ஏணியே ஏற்பாடு செய்துவிட்டாள். இப்படி நடந்த இரகசியத் திருக்கூத்து தெருக்கதையாகிவிட்டது! இப்பொழுது விடுதி மாடிக் கருகிலிருந்த மரத்தையே வெட்டி விட்டார்கள் — படிப்பு அவர்கள் அறிவை விரிவு படுத்தலாம், ஆனுல் அவர்களின் உணர்ச்சியைக் கட்டுப் படுத்தாது! பட்டிக்காட்டுப் பெண்ணுவது கற்பு, ஒழுக்கம் — என்று சொல்லி அடங்குகிருள். படித்த பெண்ணே பெண்ணுரிமை, சமத்துவம் — என்று சொல்லி ஆண்மையின் வெறிக்கு உணவாகிவிடுகிருள்!''

''இதை ஒழிக்கத் திட்டமே இல்லையா?''

"சர்க்காரின் சட்டம் உதவலாம். ஆனாலும் ஆண்மையின் தூய்மையான ஒத்துழைப்பு வேண்டும். அது கிடைக்க இன்னுங் கொஞ்சம் நாளாகும்"

அழகியை நினைத்துக்கொண்டால் அழுகைதான் வருகிறது. அவளைக் காப்பாற்ற வழியொன்றுமே கிடைக்கவில்லை. எழினியை இனி வேண்டிப்பயனில்லை. அவன் காமுகன் — ஆசை அடங்கிற்று! இனி வரமாட்டான். வீரமணியின் தத்துவங்கள் இன்றைய உலக முறையோடு ஒட்டித்தானுள்ளன. ஒத்துக் கொள்ள வேண்டியவை. ஆனால் எதிர்காலத்தை உருவாக்க இரண்டொருவராவது முன்வர வேண்டாமா? இறந்த காலம் பெற்றுவிட்ட, தற்காலம் என்ற குழந்தையின் வாலிபப் பருவந் தானே எதிர்காலம்! அதற்கு என்ன செய்வது? வீரமணியையே அதற்கும் ஒரு வழியைக் கேட்போமே...என்ன சொல்வான்?— அதன்படி நடப்பதால் தீமை ஒன்றும் நம்மை வந்துசேராது!

"வீரமணி, இப்பொழுது நான் கேட்பது விவாதத்திற்காக மட்டுமல்ல — ஒரு பெண்ணின் துவண்ட வாழ்வைப் புதுப்பிக்க! சிந்தித்து ஒரு வழி சொல்"

"முன்னுரை மிக மிடுக்காக இருக்கிறதே!"

"ஆமாம், அவள் வாழ்வு எப்படியாவது செழிக்க வேண்டும் —— அவளை ஒரு அவசர ஆசைக்காரன் கெடுத்துவிட்டான். இன்று ஓடியும் விட்டான். இனி திரும்பியும் வரமாட்டான் போலிருக்கிறது! ஆனால் அவளோ தாய்நிலையில்—தவிக்கிறாள்! அவள் என்ன செய்யட்டும், சொல்லேன், வீரமணி!—"

வீரமணி சிந்தித்தான். சிறிது நேரம் பேசவே இல்லை. பிறகு பேசினான். அவன் சொன்ன வார்த்தைகள் கேட்கவே பயங்கரமானவை! ஆனால் பிரச்சினையைத் தீர்க்க வேறு வழியே இல்லை — அவன் திட்டம் — சொன்னால் நெஞ்சு திடுக்கிடும்!

"பாண்டியா, வழியுண்டு — பாதை பழியுள்ளது—என்ன சொல்கிறாய்?"

"பழியைப் பார்த்தால் முடியுமா — நிலைமை மோசமாக இருக்கும்பொழுது!"

"அப்படியானால் இரண்டு வழி உண்டு — ஒன்று மரணம், இல்லாவிட்டால் மணம்!"

"அவளையா மரிக்கச் சொல்கிறாய்?"

"இல்லை, சிசுக்கொலை செய்யச் சொல்கிறேன் —!"

"ஐயோ —"

"இல்லாவிட்டால், எவனாவது ஒரு சீர்திருத்தக்காரனிடம் உண்மையைச் சொல்லி மணத்தை முடிக்கலாம்!"

நான் சிலையாகி விட்டேன். வீரமணியும் சிறிது நேரம் அமைதியாக என்னைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

6

சமூகம் ஒரு சிறைச்சாலை, நாட்டு மக்கள் அத்தனைப் பேரும் கைதிகள் ...! அவர்களின் உரிமையைப் பறிக்க எத்தனை சதித் திட்டங்கள், அவர்களை அடக்கி ஒடுக்க எத்தனை சம்பிரதாயச் சிப்பாய்கள்! அவர்களைக் கண்காணிக்கச் சாஸ்திரக் காவலாளிகள்! அப்பப்பா — எத்தனை முடக்குவாத முரட்டுப் பிடிவாதத் தடைகள்! இல்லாவிட்டால் வழுதியிடமிருந்து வள்ளியைப் பிரிக்க முடியுமா இந்த நீதியற்ற சமூகம் —? அவள் வேறு சாதியாம், அவன் வேறு சாதியாம்! தமிழுக்கே உரியதல்லாத 'ஜா' வந்து எத்தனை சஞ்சலங்களை நம்மீது ஏவி விடுகிறது! சாதி, சாதி யென்று அடித்துக்கொள்கிறார்களே, ஒரு சாதிக்கும் இன்னொரு சாதிக்கும் இடையில் ஏதாவது சுவர் இருக்கிறதா? ஒரு சாதிப் பெண்ணும் இன்னொரு சாதியானும் கூடி வாழ்ந்தால் குரங்கும் ஆடும் சேர்ந்த வாழ்க்கை போலச் சிக்கலானதா? சாதி முறை வகுக்காது வாழவில்லையா, உலகில் வேறு பல நாடுகள்? நந்தனை ஏற்ற நடராசரும், திருப்பாணாழ்வாரை வாழ்வித்த திருமாலும் ... ... உள்ள நாட்டில் அவரின் பக்தர்கள் சாதிக்கென்று சண்டையிடலாமா?

நல்ல நீதியடா இந்தச் சமூகத்தில் — — நெருப்பில் நிறுத்திச் சுடுகிறது என்று சொன்னால் சுட்டுவிடுகிறேன் என்று மிரட்டுகிறது! நரகலில் தள்ளிவிட்டு நாற்றமடிக்கிறது என்றால் நாவை அறுத்து விடுவேன் என்று ஆர்ப்பரிக்கிறது! தொட்டிலையும் ஆட்டுகிறது, குழந்தையையும் கிள்ளிவிடுகிறது! காதல் தெய்வீகமானது என்று எழுதாத ஏடில்லை, பாடாத புலவரில்லை, கேட்காத மக்களில்லை இந்த நாட்டில்! காதல் திருமணத்தை வெறுத்தொதுக்காத குடும்பமும் இல்லை! என்ன விசித்திரம்!

எங்களுடன் விவாதித்த வழுதி அந்த முடிவுகள் ஊட்டிய வேகத்தினுல் வள்ளியைச் சந்தித்து விடுவதென்ற முடிவுடன் சென்முன். ஆயிரமாயிரம் எண்ணங்களைக் கொட்டியிருக்கிறுன் அவளிடம்.........தன்னைப் பற்றி, தன் சூழ்நிலையைப் பற்றி, தான் வாழ்ந்த கதையைப் பற்றி, தான் வாழ்விழந்த வகையைக் குறித்து! அவள் அனுதாபம் தெரிவித்திருக்கிருள். ஆறுதல் கூறியிருக்கிருள். அவளும் எதையெதையோ பேசியிருக்கிருள். பிறர் காதல் கதைகளை, சினிமாக் காதலர்களை—தன் பேச்சில் நடமாட விட்டிருக்கிருள்.

ஆனுல் — இந்த இரண்டு வார்த்தைகளைக் கேட்கவில்லை— கேட்க நினைத்த சமயங்கள் உண்டு. எனினும் கேட்க முடியவில்லை—வெட்கமா, பயமா, சந்தேகமா—இதற்குக் காரணம்?

என்னை மணக்கிருயா?......இந்தக் கேள்வியைக் கேட்டு விடுவதென்று முடிவுகட்டி விட்டான். ஆனுல் எப்படிக் கேட்பது? நேரிலா......அது முடியாது! உணர்ச்சி அலைகளின் பேரிரைச்சலை அடக்கி, நாணத்தின் ஊர்த்துவத் தாண்டவத்தை நிறுத்தி, பருவக் குமிழ்களின் சுழற்சியைத் தடைசெய்து—— விடை வாங்கும்வரை எத்தனை மறியல்கள், அறப்போர்கள்! அவனுக்கு ஒரு யோசனை—வழக்கமான யுக்திதான்! அம்மாமி வீட்டுக் காதல் கதைகளில் ஆனந்த விகடன் வகையரு தூது சொல்லும் கிளியாகும்! வழுதி தேடி எடுத்தான் — இன்பக் கதிர்கள் என்ற கவிதைத் தொகுப்பை! அதில் 'தேன் துளிகள்' என்ற பாடல். 'எனை மணக்கும் எண்ணம் உண்டா, உன் இதயக் கூட்டில், இயம்பிடடி பெண் குயிலே, அன்பான உன் விடை தானெக்குத் தேன் துளிகள்' — என்ற போக்கில் கருத் தோட்டத்தில் இருந்த வரிகளைச் சிவப்பு மையால் குறிப்பிட்டான். இதற்கு விடை வேண்டும், என்று ஓரத்தில் எழுதிப் பணிமகன் கண்ணுசாமியின் மூலம் அனுப்பிவிட்டான்!

தூதுக் கதைகள் எத்தனையோ படித்திருக்கிறேம். அன்னம் தூதுபோன நளன் தமயந்தி கதை நமக்குத் தெரியும். கிளியுதவியால் கணவன் மனைவியான கற்பனைகள் நாமறிந்தனவே.

புரு 'டெபுடேஷன்' போன செய்திகள் பல உண்டு. கவிதைப் புத்தகம் தூது சென்ற இந்தக் கதையின் முடிவு என்ன? முறிவா — பிரிவா — இல்லை சுபம், மங்களம் என்ற நல்ல முடிவா?

வள்ளி வழக்கம் போல் வந்த புத்தகம் என்று பிரித்தாள். ஆனால் ஏடுகளைப் புரட்டும்போது அந்தக் குறியிட்ட பக்கம் அவளது கண்களிலே பட்டது பளிச்செனு — — படித்தாள் பல முறை! சிரித்துக் கொண்டாள், மனதிற்குள்ளேயே. அவள் எதிர்பார்த்ததுதானே! இது இயற்கையான நிகழ்ச்சிதானே!

திருமணம் என்றால் இன்று வேடங்கட்டி, நாளை அவிழ்த்து விடுகிற நாடக மேடையல்லவே. — ஆயுள் முழுதும் இருக்க வேண்டிய ஒரு உயரிய தொடர்பை உருவாக்கும் உன்னதமான பிணைப்பல்லவா? திடீரென்று முடிவிற்கு வரமுடியுமா? தீர ஆலோசித்த பின்னர்தான் முடிவிற்கு வரவேண்டும். அதுதான் நல்லதுங் கூட! ஆகவே அவள் யோசித்தாள் ... ... அவள் யோசனை முடியவே பல நாட்களாகி விட்டன. வழுதி துடித்தான்!

வழுதியின் நிலைமையை ஆராய்ந்தாள். தன்னுடைய நிலையையும் சீர்தூக்கிப் பார்த்தாள். தன்னையும் அவனையும் ஒரே இடத்தில் நிறுத்தி ஒப்பிட்டாள். பொருத்தம் என்றுதான் அவள் ஆராய்ச்சி தீர்ப்பளித்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவள் அடிக்கடி நாணத்திற்காளாகிக் குனிந்து குனிந்து ஏன் சிரிக்க வேண்டும்? பின்னும் ஏன் தவக்கம்? — அன்புள்ள காதலரே, உமை மணக்க ஒப்பினேன் முக்காலும், இனித் தயக்கம் வேண்டாம் என் துரையே, இராசாவே—என்று எதையாவது எழுதி விட முடியுமா!

வள்ளி தனியான பூங்கொடி அல்லவே! கொடியை வளர்த்த மலர்த் தோப்புக்காரர்களில்லையா? அவர்கள் ஒப்பவேண்டாமா? வள்ளி தன் பெற்றோர்களுக்குத் தன் மன நிலையைத் துணிந்து தெரிவித்து விடுவது என்று காகிதத்தை எடுத்து எழுதினாள்— இதுவரை பன்னிரண்டு முறை எழுதிக் கிழித்து விட்டாள்! அவர்கள் எழுதப்போகும் விடை அவளுக்குத் தெரியாததல்ல—

இருந்தாலும் முயற்சி செய்யலாமல்லவா? அதற்காகத்தான் எழுதினுள் சற்று விளக்கமாகவே! அந்த விடைக் கடிதத்தை அவள் எதிர்பார்த்திருக்கும்பொழுது அவள் மனநிலையை என்னுல் வருணிக்க முடியாது—அனுபவம் சொல்லிக்கொடுக்கட்டும்!

வள்ளியும் வழுதியும் நெருங்கிப் பழகுவது குமரிக் கோட்டத்து 'அரட்டை மாநாட்டு' வரவேற்பாளர், தலைவர், திறப்பாளர், கொடியேற்றுபவர், சொற்பொழிவாளர், தீர்மானம் முன்மொழிபவர், வழிமொழிபவர், நன்றி கூறுபவர்—ஆகியவர்களின் கர்ஜனையில் முதலிடம் பெறும் முக்கியமான பிரச்சினை. ஆகவே கல்லூரி முழுவதும் காட்டுத்தீபோலப் பரப்பிவிட்டனர். இந்தக் குறும்பர்களுக்குப் பயந்துதான் முதலில் வழுதியை வரவேண்டாம் என்றே சொன்னுள். "பிறகு குலைக்கும் நாய்கள் குலைக்கட்டும். வானவீதி சூரியனை வழிமறைக்கவா முடியும்—" என்ற எண்ணத்தில் பழகினுள்! வள்ளியின் வீட்டிற்கும் சில சூதுக்கார மாதுசிரோன்மணிகள் மொட்டைக் கடிதம் எழுதி விட்டனர். அந்தக் கடிதத்தின் மூலம் வள்ளிக்கு ஒரு குழந்தையையும் கொடுத்துவிட்டனர்! பெற்ருேர் மருண்டனர் ஆரம்பத்தில். பிறகு அவள் போக்கில் விட்டு விட்டனர். படித்த பெண்கள் எஃகுத் துண்டுகள்; அதிகம் வளைத்தால் துண்டாகுமே ஒழிய வளையாது! இதை உணர்ந்துகொண்டு வறிதிருந்து விட்டனர். கடைசியில் வள்ளியின் கடிதத்தைக் கண்டதும் காரியம் மிஞ்சிவிட்டது என்று புரிந்துகொண்டனர். தாய் புலம்பினுள். தந்தையின் மீசை துடித்தது. அண்ணன் அனற்பிழம்பாக்கினுன் தனது கண்களை! அவளை மணக்கலாம் என்று ஆசையுடன் நாவைச் சொட்டிக் கொண்டிருந்த அத்தை மகன் அத்தானுக்கும் இந்தச் செய்தி 'ஓரளவு' தெரிந்துவிட்டதால் அவன் வேறு அனலிற் புழுவாய்த் துடித்தான்!

தந்தை ஒரு காரசாரமான பதில் கடிதம் எழுதியிருந்தார் — 'குடும்பத்தின் கண்ணியத்தைக் காக்கப் பிறந்த என் கண்மணி, ஆசைமகள் வள்ளிக்கு ஆசிகள் ஆயிரம், வாழ்த்துகள் கோடி—' என்று ஆரம்பித்து...' உன் மனப் பித்தத்தின் விளைவாக உளறிக் கொட்டியிருந்த வார்த்தைகளைப் பார்த்தேன். ஆத்திரப்பட

வில்லை. அறியாத பெண், உலகந் தெரியாத என்மகள் என்ற முறையில் மன்னித்துவிட்டேன் — ஆனல் வழுதியின் மீதும் குறை சொல்லவில்லை — பருவக் கோளாறு, பழக்கத்தால் வந்த தீமை!

உன் படிப்பு உனக்கு வேலியாகும் என்று எண்ணினேன். ஆனல் அதுவே பயிரை அழிக்கும் ஆடாக, மாடாக மாறிவிட்டது! அம்மா, இன்னும் நாம் புரட்சிப்பாதையில் இறங்கிவிடவில்லை. சாதிவிட்டுச் சாதி தாவமுடியாது — நாம் வாழவேண்டும், உற்ருர் பெற்ருர் புடை சூழ என்பதை நினை. தமிழகம் இன்னும் அந்தப் பக்குவம் பெறவில்லை — இப்படியே பேசிக் கொண்டிருந்தால் யாராவது ஒருவர் முன் இறங்க வேண்டுமே என்பாய். நீரில் இறங்காமல் நீச்சல் வருமா என்று படித்ததை என்னிடம் ஒப்புவிப்பாய் — எனக்குத் தெரியும், சீர்திருத்தம் பேசும் தலைவர்கள் பலர் துணிந்து செய்யப் பயப்படும்போது நான் சாதாரணமானவன் தடுப்பதிலே தவறில்லை. மகளே— உன்னைப் பலியிட என்னல் முடியாது! காதல் என்று சொன்னலும், கருத்தொருமித்து விட்டோம் என்று பேசினலும் நீ கேட்கும் திருமணம் நடைபெருது, நடைபெறக்கூடாது! உனக்கு நம் குடும்பத்தின் நிலை தெரியாதா? உன்னை மணக்கத் துடிக்கும் அத்தான் அழகேசனை மறந்து விடாதே! அவன் உன்னைத் தன் உயிராக எண்ணியிருக்கிருன் — உன் தாயும் மனம் உடைந்து போவாள் இந்தத் துடுக்குத்தனத்தைக் கண்டு! ஆகவே இந்த ஓய்விலேயே அழகேசனுக்கும் உனக்கும் திருமணத்தை முடிக்கிறேன். ஆனலும் உன் படிப்பை நிறுத்தவில்லை—நீ படிக்கலாம். நீ பிடிவாதக்காரப் பெண்ணென்பது எனக்குத் தெரியும். எனக்குப்பிடித்த பொம்மைகளை வாங்கிக் கொடுத்தீர்கள், தின்பண்டங்கள் தந்தீர்கள், சேலை எடுத்துக் கொடுத்தீர்கள் — ஆனல் என் மணத்தில் எனக்குரிய உரிமையைப் பறிக்கிறீர்களே என்று நாடக வசனங்களையெல்லாம் கொட்டியளப்பாய் — ஆனல் குடும்பத்தின் சுயமரியாதையை, பெருந்தன்மையை எண்ணி இந்த எண்ணத்தை விட்டுவிடு. எதிர்த்து எதையும் செய்வாயானல் என்னை மறந்து விடுவதல்லாமல், உன் தாயின் பிணத்தையுந்தான்

பார்க்க முடியும்! அவள் மனமுடைந்து இறந்து விடுவாள்.... மகளே, என் அறிவுரைகளுக்கு மதிப்புக் கொடு. உன் வாழ்விற்கான திட்டங்களைத்தான் ஒரு தந்தை சொல்வான்...என்று தங்களின் புத்திமதிப்படி நடக்கிறேன் அப்பா என்று கடிதந் தீட்டுவாயா? இல்லாவிட்டால் நானே வரட்டுமா?......'' இப்படி எழுதித் தள்ளியிருந்தார், அதைப் படித்தாள். வள்ளியின் முகம் வாடிவிட்டது. அவள் பெண்தானே? வேறு என்ன செய்ய முடியும்? ஆத்திரந் தீரக் கொஞ்ச நேரம் விம்மிவிம்மி அழுதாள். தந்தையின் முடங்கலையே தன் காதல் தோழனுக்கு அனுப்பிவிட்டாள்! அத்துடன் வேறொரு கடிதத்தையும் இணைத்திருந்தாள்......அதில் "பெற்ற தந்தையின் கடிதமும் இருக்கிறது. அவரை எதிர்க்கும் நிலையில் நானில்லை. இந்தச் சங்கடத்தைத் தீர்க்க ஏதாவது வழியுண்டா?...என்னை மறந்து விடுங்கள், நானும் மறக்க முயற்சி செய்கிறேன்''...என்று எழுதிவிட்டாள்!

வழுதி அந்த அலங்கோலமான முடிவை எதிர்பார்க்கவில்லை. ஆம். அவளது கொள்கையிலே நம்பிக்கை வைத்திருந்தான், அவளது துணிவிலேகூடச் சந்தேகங்கொள்ளவில்லை. ஆகவேதான் நல்ல முடிவை எதிர்பார்த்தான். இனி அவளை வற்புறுத்துவதில் பயனில்லை. வள்ளியை மறப்பதா? இலை பசுமையை மறப்பதுபோல, தண்ணீர் குளிர்ச்சியை மறப்பதுபோல பால் வெண்மையை மறப்பதைப் போல கதிரவன் தன் ஒளிக்கதிர்களை மறப்பதைப்போல—வழுதி வள்ளியை மறக்கவேண்டும்! அவனால் முடியாத காரியம் ஒன்றுண்டு என்றால் அதுவள்ளியை விட்டுப் பிரிவது என்ற ஒன்றுதான்! இவன் கொண்ட காதல் குறையுடையதா? அவள் காதல்தான்மாசுள்ளதா? காதல் பாதை மலர்ப்படுக்கையல்ல என்கிறார்களே—அதுபோல இன்னும் பல துயரங்களுக்குப் பின்னால் ஒரு வேளை ஒன்று சேர்வார்களா?

வீரமணி சொன்ன உபதேசத்தைப் பயன்படுத்தியிருந்தால் அவர்கள் கூட்டுறவு முறிந்து விடாதா—? எப்படி முறியும்? எவர் பிரிப்பர்? அப்படியொன்றும் இல்லாவிட்டால்கூட இருப்பதாக நடித்தால்மட்டும் போதுமே, தந்தை மிரள மாட்டாரா? அழகியின் நிலைமைக்கு வள்ளி வந்திருக்க மாட்டாளா? வழுதி

எழினியைப் போலக் கோழையல்ல, கொள்கையற்ற கோட்டானல்ல, விட்டோட, விதண்டாவாதம் பேசித் தட்டிக்கழித்து விட! கிடைக்காத பெருஞ் செல்வமென விரும்பியல்லவா ஏற்றுக் கொண்டிருப்பான்!

கடவுளைப் பார்த்தவர்கள் ஓரிருவரே உண்டென்கிறார்களே ஆஸ்திக அன்பர்கள்! காதலில் வெற்றி கண்டவரும் கைவிட்டு எண்ணக் கூடியவரே! அந்தக் காதல் கடவுளுக்குக் கண் இல்லையா?......வழுதியைத் தவிக்கவிட்டு வள்ளியைப் பிரிக்கலாமா? வள்ளியை உரிமையுள்ளவனைச் சேரவொட்டாமல் தடுக்கலாமா?...ஒத்த மனங்கொண்ட ஒன்றுபட்ட ஒரு ஜோடியைப் பிரிக்க உலகத்தில் யாருக்குத்தான் அதிகாரம் உண்டு—சட்டம் தோற்றுவிடும், சாதி படுத்துவிடும், சாத்திரம் விரண்டோடி விடும், சமூகம் மண்ணைக் கவ்வும்! எப்போது? அந்த இரட்டையர் நெஞ்சுரத்துடன் இந்த நேர்மைகெட்ட சமூகத்தை எதிர்க்கத் துணிந்தால்......! இந்த நூற்றாண்டில் அவர்கள் பக்கம் நின்று போரிட ஒரு பட்டாளமே இருக்கிறது! ஆனால் அந்த 'நாம் இருவரு'க்குள்ளேயே சந்தேகம், பயம் புகுந்து விட்டால் யார்தான் துணைசெய்ய முடியும்? இந்தச் சமூகம் அஞ்சியவரை விரட்டும், அடங்காதவனை வணங்கும்! நாய்க்குணம் படைத்த நாசகாரச் சமூகம்! பணத்தைக் கண்டு பல்லைக் காட்டித் தன் சட்டங்களை விட்டுக் கொடுக்கும்! ஆகவே போராட்டம் தொடங்க வேண்டும். வாழ்க்கையே போர் என்று கூறும்போது வாழ்க்கைக் கோட்டை வாயிலில் ஒரு சிறு தாக்குதல் நடத்தினால் என்ன? அப்படி அவர்கள் சண்டை தொடுத்து விடட்டும்......வெற்றி அவர்கள் காலடியில் வந்து விழும்!

வள்ளி மனம் வைக்கட்டும். வழுதி கொஞ்சம் துணிவைத் திரட்டிக் கொள்ளட்டும். பதிவாளர் முன் சென்று மணமக்களாக மாறட்டும்...... எதிர்ப்புச் சக்தி என்ன ஆகும்? துகள், துகளாகச் சிதறிவிடும்!

வழுதி யோசித்தான்...... அவன் கண்களிலே நீர் வடிந்தது. காதல் ஒரு விசித்திர சக்தி வாய்ந்த மாயாவி போலும்!

ஒருவனுடைய மனத்திலே புகுவதில்லை வெகு எளிதில், புகுந்து விட்டால் குரங்காட்டம் ஆட்டி விடுகிறது! காதலுக்குக் கட்டளை பிறப்பிக்க எந்தக் காவலனாலும் முடியாது! கடலலையை அடக்கி, காற்றை நிறுத்தி, கதிரவன் ஒளியைத் தடுத்து வெற்றி கண்ட வேந்தர் இருந்தால் நிச்சயமாகக் காதலையும் கட்டுப்படுத்தலாம்! வள்ளி தகதகவெனும் தணலைத் தண்ணீராக்கச் சொல்கிறாள். புயலை அடக்கிடச் சொல்கிறாள். வானத்தை இழுத்து வரச் சொல்கிறாள். நிலவை ஓட்டி விடச் சொல்கிறாள்...... முடியாத காரியத்தைச் செய்யச் சொல்கிறாள்! அவளை மறப்பதா? இது முடியாத காரியம்! தேன் கிடைக்காமல் ஏங்கலாம். தித்திப்பான தேனையே மறந்துவிட அவனால் முடியாது!

இத்தனை நாள் காத்திருந்த வழுதிக்கு இதுதானா பதில்...... இலவுகாத்த கிளியா அவன்! பலநாள் எண்ணி எண்ணிக் குமுறிய நெஞ்சத்திற்கு இதுவா ஆறுதல்......! உள்ளத்தில் எழும்பி எழும்பி அடங்கிய ஆசை அலைகளுக்கு இதுவா மாற்றம்......! மனதிலே கட்டிக் கட்டி அழகு பார்த்த கற்பனைக் கோட்டையின் மீது பேரிடி விழுந்தது போலல்லவா உள்ளது இந்தப் பதில்......! இத்துடன் அவன் காதல் கனவுகளைச் சுட்டுச் சாம்பலாக்க வேண்டியது தானா? அக்கனவுகள் நனவாகும் நன்னாள் இனி வாழ்விலே வராமலே போய் விடுமா?

வழுதி இறுதியாக வள்ளியை இனி இதுபற்றித் துன்புறுத்திக் கேட்பதில்லையென்று முடிவிற்கு வந்து விட்டான். ஆனால் அவனது உடைந்த உள்ளம் கூடுமா? மனம் தங்க ஓடல்ல, உடைந்தால் உருக்கி ஒன்றாக ஒட்டவைக்க! அது மண் ஓடு, உடைந்தால் உடைந்ததே தான்! அவன் வெறியனைப் போலத் திரிய வேண்டியது தானா?

அவன் இனி எந்த ஒரு பொருளின் மீதும் அதிக ஆசையைத் தேக்கி விடுவது நல்லதல்ல என்று தத்துவம் பேசினான். ஒரு பொருளின் மீது ஆசைப்படுவானேன்...... அது கிடைக்கவில்லையே என்று ஆயாசப்படுவானேன்? என்ன பைத்தியக்கார உலகம்...... ஆசையைக் கிளப்பி விட்டு, அதைப் பூர்த்தி செய்

யாமலும் வேடிக்கை செய்கிறதே! வயிற்றுக் கில்லாத நிலையை உண்டாக்கித் திருடவும் செய்து, பிறகு அவனுக்கென்று சிறை யையும் கட்டிவைத்துக் கொண்டிருக்கும் ஆட்சியாளர் வாழ்கிற பூமி தானே...... ஏன் இந்த அநியாயம் இருக்காது! ஜனநாயகம் என்று சொல்லிக் கொண்டு சர்வாதிகார ஆட்சி நடத்தும் போலி ஆட்களைப் போலக் காதல் என்று சொல்லிக் கொண்டு காமத் திருவிழா நடத்துபவர்களுக்குத் தான் களியாட்டம்! வழுதி உண்மைக் காதல் என்று பிதற்றி இப்பொழுது ஏமாந்து விட்டான்!

அவனது களங்கிய நெஞ்சை மகிழ்ச்சியடையச் செய்ய மார்க்கம் உண்டா? கருகிப்போன எண்ண மொட்டை வேறு முறையில் மலர்விக்கலாமா? நொறுங்கிப் போன அவனது ஆசையைச் சேர்த்துக் குழைத்து வேறொரு உருவாக்கிவிட முடியுமா? காதல் அவனைப் பொருத்த மட்டில் இழந்த காத லாகி விட்டது! அதற்காக அவன் வாழ்வு முழுவதும் மஜ்னு— பைத்தியமாகத் திரிவதா? இது கூடாது, முடியாது! அவன் வாழ்வைச் செம்மையாக்கத்தான் வேண்டும். அதற்கொரு திட்டம் கண்டுபிடித்தேன். ஆனால் சொல்லவில்லை, அவன் என்னை நாடி வந்தபோது! இந்த முறிந்த காதலைப்பற்றி முறை யிட என்னிடம் வந்தான். எல்லாவற்றையும் கேட்டேன். ஆனால் எதையும் விடையாகச் சொல்லவில்லை. ஏனெனில் என் மனதில் வேறொரு புது எண்ணம் புகுந்து குடைந்து கொண் டிருந்தது!

7

"கூண்டுக்கிளியடா பெண்—பழம் தருவான், பால் தருவான், அதன் இச்சைபோலப் பறக்கத்தான் விடமாட்டான் கிளியை....! அது போலச் சமூகம் என்ற கூண்டில் சாதிபேதம் என்ற கம்பிகளை மாட்டி, கற்பு என்ற பூட்டையும் இட்டு தாய் தந்தை என்ற காவலாளிகள் கையில் மணஉரிமை என்ற சாவியும் கொடுக்கப்பட்டுள்ளது! கிளியைப் போற்றுவான், புகழ்வான், 'அக்கா' எனும்போது பூரித்தே போவான். 'மடையா' என்று கூவினாலும் மகிழ்ச்சியடைவான். அதுபோலப் பெண்ணைப் புகழ்வான். இலக்கியத்தில், காவியத்தில் தீட்டித்தீட்டி மகிழ்வான். ஆனால் பறந்து செல்ல விடமாட்டான்!" என்று கூறினேன் வழுதியிடம்!

"சமூகக்கூண்டை உடைக்கத்தான் வேண்டும். அப்பெண் கிளி, தன் உரிமை வேட்கை என்ற மூக்கால்" என்றான் அவன் ஆத்திரத்தோடு!

"வள்ளிக்கு அந்த மன உரம் இல்லை. உயர் கல்வி அந்த உரிமை வேட்கையை வளர்த்திருக்க வேண்டும், செய்யவில்லை".

"வள்ளியைக் குறை கூறாதே...... சதிகார சமூகத்தைச் சொல். ஒரு முறைக்கு ஆயிரம் முறை திட்டு...... திருந்தும் வரை!"

வழுதி வள்ளியை மறக்கும் முடிவிற்கு வந்து விட்டான். மகிழ்ச்சி—அந்த அளவிற்கு மனதை தேற்றிக் கொண்டானே! அவன் மனத்தை இரும்பாக்கி விட்டானாம். இனி பஞ்சு நெஞ்சம் கொஞ்சமும் மிஞ்சியோ, எஞ்சியோ இல்லையாம். அவன் திடமாக இருக்கும் ஒரு வழி கண்டு பிடித்து விட்டானாம். புத்தர் காட்டிய நல் வழியாம். அவர் உதிர்த்த பொன்மொழிப் படியாம். ஆசை தான் துன்பத்திற்கு அடிப்படையாம்......

அதை அறவே ஒழித்து விட்டால் துக்கமே இல்லையாம்! சொல்லி விடலாம் எளிதில், செய்ய வேண்டுமே! எந்தப் பொருளையும் அவன் அதிக விருப்பத்துடன் நோக்கப் போவ தில்லையாம். கைநழுவும் போது மனம் நோக வேண்டியதில்லை யல்லவா? அப்பொழுது அவன் பௌத்த பிக்ஷுவா...... இல்லை. ஏமாற்றத்தின் உளறல்கள் அவை?

"இனி என்ன செய்யப் போகிறாய்?" என்று முடிவாகக் கேட்டேன்.

"படிக்கப் போகிறேன்"

"அது தெரியும்—உன் அகத்துறையில் வள்ளிக்குப் பின் வேறு யாருக்கும் இடமில்லையா?

"சிந்தித்துச் செய்ய வேண்டிய முடிவு அது"

"நீ சீர்திருத்தவாதி தானே?"

"சந்தேகமில்லாமல்"

"கலப்புத் திருமணம் உங்கள் திட்டங்களில் ஒன்று தானே......"

"அதற்கு வழியில்லாமல் செய்து விட்டாள் வள்ளி, இல்லா விட்டால் செய்தே காட்டியிருப்பேன்"

இப்படி கேள்வி மேல் கேள்வி கேட்கவும் வழுதி மலைத்து விட்டான். நான் என்ன சொல்லப் போகிறேன் என்று புரிய வில்லை. என் முடிவை அவன் உடனே தெரிந்து கொள்ள வேண்டும் என்று துடித்த துடிப்பை, பரபரப்பை அவன் முகம் காட்டிக் கொடுத்து விட்டது.

"வழுதி......"

"பாண்டியா, சொல்லப் போவதை உடனே தவக்கமின்றிச் சொல். என் ஆர்வத்தை கிளப்பி விட்டு வேடிக்கை பார்க்காதே"!

"சமூகக் கூண்டை உடைத்துக் கொண்டு ஒரு கிளி பறந்தது"

"எங்கு......?"

"நம் கல்லூரியில்!"

"பறந்து......!?"

"பறந்து வரும்பொழுது ஒரு பாவிமகன் வேடன் எய்த அம்பில் கீழே விழுந்துவிட்டது?"

"அம்பால் புண் உண்டா?"

"ஐந்துமாதம் வயிற்றில்...!"

"ஐயோ ... கிளியின் பெயர்?"

"அழகி!"

வழுதி வாயடைத்துவிட்டான். அவனுக்கு அந்த மனங் குலுங்கும் சம்பவம் அறவே தெரியாது! ஆகவேதான் பதறிப் போனுன். சிலேடையைவிட்டிறங்கி வந்து நான் தெளிவாக உண்மைகளை எடுத்துச்சொன்னேன், அழகிய பெண்ணணங்கு அழகியின் அழுதுவீங்கிய கண்களையும், அதிலிருந்து வடிந்த கண்ணீரையும் காட்டினேன் முதலில்......பிறகு வன்னெஞ்சங் கொண்ட காமுகன் எழினியின் கொள்கையற்ற கோழைத்தனத் தைச் சுட்டினேன்...அப்புறம் வீரமணியின் திட்டங்களையும் சொன்னேன். அவன் பரிதாபத்தோடு அந்த நிகழ்ச்சிகளைக் கேட்டான்.

பெண்மை...மோப்பக் குழையும் அனிச்சம்போன்ற மென் தன்மை! எழினி யானைபோலத் துவைத்துவிட்டான். மந்தி யின் கையில் கிடைத்த மலர்போலக் கசக்கி எறிந்துவிட்டான். கிளியினிடம் கிடைத்த பழம்போலக் கொத்திக் கொத்தித்தள்ளி விட்டான். இளநீர் போன்ற இனிய நீர்நிறைந்த தடாகத்தைச் சேறும் சகதியுமாக மாட்டுக்கூட்டம்போலக் குழப்பிவிட்டான்.. அந்தப் பெண்மையை வாழ்விக்கவேண்டியது உண்மை ஆண்மை யின் நீக்கமுடியாத கடமை!

சீர்திருத்தவாதி ஒலிபெருக்கி மட்டுமல்ல, செயல் செய்யும் பெரு இயந்திரம்! பேச்சு குறைவாகவும், செயல் நிறைவாக வும் இருக்கவேண்டும்! சீர்திருத்தம் என்பது ஒரு பெரிய கட்டடம்—அது உருவாவதற்கு எவ்வளவு பேர்களின் இரத்த வியர்வை........ஓயாத உழைப்பு...சலியாத முயற்சி...எவ்வளவு பொருள்களின் இணைப்பு—கல், மரம், இரும்பு, சேறு...! அவசரத்தில் முடியக்கூடிய காரியமா! கட்டடம் வலுவாக இருக்கவேண்டுமானால் எவ்வளவு பொறுமையான செயல்கள்...! அதனால்தான் வள்ளி சிந்தித்தாள். அழகி அவசரப்பட்டு அடிப் படையில்லாத கட்டடமானால்! சீர்திருத்தப் பாதையில் நிதான மும் செம்மையும் தேவை...வேகமும், பதட்டமும், தீவிரமும் பாதையைப் பாழாக்கிவிடும்! சீர்திருத்தம் ஒரு ஆறு — காட் டாறல்ல! திடீரென்று வெள்ளமும், பிறகு கொஞ்ச நாள் நீரே இல்லாமலிருப்பதும் கூடாது! நிதானமான நீரோட்டம் வேண்டும். சீர்திருத்தம் வெற்றியடைய வேண்டுமானால் அவசரங் கூடாது, நிதானம் நிச்சயமாகக் கையாளப்பட வேண்டும்!

மழை பெய்தால் நீர்நிறையும் குட்டையல்ல, தானே ஊறி நிறையும் வாவி சீர்திருத்தம்......வள்ளி என்ன செய்வாள்? அவசரப்பட்டு ஒரு காரியத்தைச் செய்துவிட்டால் ஒரு குடும் பமே கெட்டு நாசமாகிவிடும். சீர்திருத்தக் கொள்கைகளை ஆத ரிக்கும் தந்தை சீறிப் படமாடும் நாகமாவார். இப்பொழுது தான் சீர்திருத்தக் கொள்கைகளின் உண்மைத் தன்மைகளை உணர ஆரம்பித்திருக்கும் தாய் பதறிப்போவாள்! குடும்பத் தில் நடந்துவந்த வைதிகச் சடங்குகளை ஒழித்து விட்டார். இப் பொழுதுகூடத் திருமணத்தில் புரோகிதம் கூடாதென்றால் ஒப்பு வார், அர்த்தமற்ற சடங்குகள் ஆகாதென்றால் தடைசொல்ல மாட்டார். ஆனால் அழகேசனுக்குப் பதில் வழூதியிருக்கட்டும் என்றால் அந்த அளவு சீர்திருத்தங்கூட அல்ல—புரட்சியை அவ ரைப் பொறுத்தமட்டில்—சீரணிக்க முடியவில்லை. ஆகவேதான் அவர் எதிர்க்கிறார். நினைத்தால் குழந்தை கிடைத்துவிட மனிதர்களுக்கு என்ன தெய்வீக சக்தி உள்ளது? பத்துமாதம்

தாய்வயிற்றில் வளர்ந்துதானே வெளிவரும், விதைதூவிவிட்டு அடுத்த நாளே அறுவடைசெய்ய முடியுமா? சீர்திருத்தமும் அப்படியே!

எழினியின் செயல் எந்த முறையிலும் சரியில்லை ... புரட்சிக்கு ஒத்து வராதவன் ஒரு புதுமலரைக் கசக்குவானேன்? சீர்திருத்தவாதிகள் உலகம் ஒரு விசித்திர தட்ப வெப்பநிலையிலுள்ள பூமி — அங்கு கொள்கை வெப்பமும் தாங்க முடியாது, அதைச் செயல்படுத்தும் தட்பமும் சகிக்கக்கூடியதல்ல! இந்த சீதோஷ்ணம் ஒத்துக்கொள்ளாத எழினி எப்படி அழகியை அழுகச் செய்யலாம்...? அவன் நிச்சயமாகத் தண்டனை பெற வேண்டிய குற்றவாளி...அவனை யார் தண்டிப்பது? ஏன்? அவனுக்கு ஒரே ஒரு தண்டனை தரலாம். அழகியை வேறொருவனுக்கு மணம் முடித்து, அவனது குழந்தையைப்பற்றி உலகுக்குச் சொல்வது, அவனது 'பயந்தாங்கொளி'த் தன்த்தைச் சொல்லி சிரிப்பது .... ஒளித்துவைத்துப் பயன்? மூடிமூடி வைத்துத்தானே சமூகச் சாக்கடையில் விபசார புழுக்கமும், சிசுக்கொலை போன்ற பூச்சிகளும் நிறைந்து விட்டன ...!

அதற்கு ஒரு வீரன் வேண்டும் ... நான் என்னை அதற்கு தயார் செய்து கொள்வேன். ஆனால் அன்னுவை என் மனத்தை விட்டுக் காலிசெய்ய முடியாதே ... அவள் எனக்குக் கிடைக்காவிட்டாலும் அவளின் ஓவியம் என் மனத் திரையிலிருந்து அழிக்கப்படாதே......அவளை விட்டு அழகியை என்னால் ஏற்று வாழ்க்கை நடத்த முடியாதே? வழுதி ஆர அமரப் பேசினான்.

"பாண்டியா, அந்தச் சிறகொடிந்த கிளியைக் காப்பாற்றும் கடமையை நானே ஏற்கிறேன்..."

"ஆ! ஆச்சரியம் வழுதி! உனது நெஞ்சுத்துணிவை நான் பாராட்டுகிறேன், உனது திட முடிவுக்கு என் வாழ்த்து, ஒரு பெண்ணின் வாழ்வைப் புனருத்தாரணம் செய்ய முனையும் முயற்சிக்கு என் அன்புகலந்த நன்றி...!"

"அவள் என்னை ஏற்பாளா...?"

"புரட்சியைக் கண்டு பயந்தோடும் ஒரு தொடை நடுங்கியை விட இலட்சியத்திற்காகப் போராடும் ஒரு வீரன் எந்த வகையிலே தாழ்ந்தவன்?"

"அந்தத் துலாக்கோல் அவள் கண்கலல்லவா?"

"அவள் கண்கள் இப்பொழுது குளங்கள் ...... அளக்கும் சக்தியில்லை ... வாழ வழியுண்டா என்று ஆராயும் நிலையில் உள்ளாள். ஆதரிப்பாருண்டா என்று ஆராயும் சக்தி தானுள்ளது! ..."

உடனேயே வழுதியை அழைத்துக்கொண்டு சென்றேன். குமரிக் கண்டத்தினுள் நுழைந்தேன். அழகியை அழைத்தேன். அவள் அன்னுவுடன் வெளியில் வந்தாள்.

"கொஞ்சம் தனித்து உரையாடலாமா?"

"அப்படியானல் பூந்தோட்டம் பக்கமே போவோமே...!"

அழகி, அன்னு உடன்வர நான் வெளியில் வந்தேன். வழுதி வெளியிலேயே நின்றுகொண்டிருந்தான். அவனையும் அழைத்துக்கொண்டேன். நடந்தேன். என் முகத்திலே சிந்தனைக் கோடுகள்...என் உள்ளத்து அமைதியின்மை 'பட்டவர்த்தனமாக'த் தெரிந்தது! பேசாமல் நடந்தோம்! பிறகு வழக்கம் போல அன்னு பேச்சை ஆரம்பித்துவைத்தாள்.

"தோழர் எழினியைச் சந்தித்தீர்களா...?"

"அன்னு, அவனை மனிதன் என்று இன்றுவரை நினைத்தேன். அந்த எண்ணத்தில் மண்ணைப்போட்டு விட்டான். அவன் உணர்ச்சி நரம்புகளாலான விலங்கு ... நான் எவ்வளவு தூரம்...வாதாடியும் வழிக்கு வரவில்லை. காதலுக்காக இல்லாவிட்டாலும், கடமைக்காகவென்று செய்யாவிட்டாலும், மனிதாபிமானத்திற்காகவாவது கருணை காட்டடா என்று கெஞ்சினேன்...ஓடிவிட்டான்!"

"ஐயோ...என் கதி!" என்று பதறினுள் அழகி.

முத்தெடுக்கும் முயற்சியிலிறங்கி கடலில் முழுகிக்கொண்டு முத்துக்களைச் சேர்க்காமல் உடைந்து நொருங்கிய எழும்புத் துகள்களைச் சேகரிக்கலாமா? மலர் பறிக்கப்போய் மயிலாட்டத்தில் மயங்கிவிடலாமா? படிக்கவந்து காதகர்களுடன் காதல் என்று சொல்லிக் காம ஆட்டம்போட்டு இப்படிக் கண்ணீர் பெருக்கலாமா? படிக்குமிடத்தில் காதல் ஏற்படலாம்...! படிப்பும் காதலும் ஒன்றையொன்று தழுவிக்கொண்டு போவதாக இருக்கவேண்டும். ஒன்று மற்றொன்றின் பகையாக இருக்கும் நிலைகூடாது! அழகி அப்படித்தான் அவதிக்குள்ளாகிவிட்டாள்.

"அஞ்சாதே, அழகி..."

"சமூகத்தின் கண்களையும், காதுகளையும், வாயையும் யாரால் மூடமுடியும்?" அன்னுவின் கேள்வி இது.

"அழகி மணந்து கொள்ளட்டும்!"

"நல்ல வேடிக்கை.........எழினிதான் இணங்கவில்லையே!'

"அந்த அச்சத்தின் உருவுக்கு நல்ல பாடங் கற்பிக்க ஒரு வீரன் தயார். இத்தனை கதைகளையும் கேட்டபின்னர் உன்னை மணக்க இசைகிருன் ஒரு வீரன்...!"

"என் வயிற்றிலே ஒரு சிசு வளர்கிறது என்று தெரிந்து கொண்ட பின்னருமா...?"

"ஆம், ஆம்..."

"அந்த இலட்சியவாதி யார்?"

"அவரைக் காட்டுகிறேன் பிறகு...முதலில் சொல்லு என் திட்டம் சரியா? அவரை மணக்க இசைகிருயா?..."

செத்த மௌனம் சிறிது நேரம்.

"உங்கள் விருப்பம் அதுவானுல் ... ... அழகி தடை சொல்லமாட்டாள்!" அன்னு முடிவுரை கூறினுள்.

இப்பொழுதுதான் வழுதி பேசினுன். அவன் தானுகவே தனது தீர்மானத்தை எடுத்துக் கூறினுன்.

"அழகி...பாண்டியன் கூறியபடி நீ நடக்கச் சித்தமா? என்னை உன் கணவனாக ஏற்றுக்கொள்வாயா?..."

"ஆ...நீங்களா? இரு பெண்களும் ஒரே நேரத்தில் கேட்டனர்.

"தோழியரே, ஆச்சரியம் ஏன்? நானேதான்!"

"வள்ளி........."

"அவள் எனக்குச் சொல்லிக் கொடுத்ததைச் செய்கிறேன் ....பெண்கள் முன்னேற்றம் என்று எத்தனையோ முறை சொல்லியிருப்பாள்...! அழகியை மணப்பதால் அவள் சொன்ன கொள்கையை நான் நடைமுறைத் திட்டமாக்குகிறேன் என்பதே அர்த்தம்..."

"தங்கள் துணிவிற்கும், தயாள சிந்தைக்கும் என் வணக்கம்" என்றாள் அன்னா.

"துணிவல்ல தோழி இது, ஆணின் கடமை"

"உன் இசைவை வெளிப்படையாகத் தெரிவித்துவிடு அழகி" என்றேன் நான்.

"அண்ணாவின் கட்டளையைத் தங்கை நிறைவேற்றத் தவற மாட்டாள்"

அழகியின் வாழ்வு இனி மணங் கமழும். அவளது பாழ் பட்ட எதிர்காலம் புதுஒளியுடன் விளங்கும். எழினியின் முகத்திலே கரி, கரி......அவனது துரோகத்திற்கேற்ற எதிர் நடவடிக்கை இதுதான்! இந்த மதிகெட்ட சமூகத்தின் கண் களுக்கு முன்னால் எழினியின் துரோகச் செய்கையைப் படம் பிடித்துக்காட்ட வேண்டும். இனி சமூகத்தில் எழினிகள் அங்கத்தினர்களாக இருக்கும் நிலையை வெடிவைத்துப் பெயர்த் துத் தள்ள வேண்டும். வழுதிபோன்ற உண்மையான சீர் திருத்த வாதிகளை வாழ்த்தவேண்டும். அவனது துணிகரமான முடிவைப் பாராட்டவேண்டும்.

"அழகி..." என்ருன் வழுதி.

"அன்பா..." என்று ஆர்வத்தோடு அழைத்தாள்.

அன்னுவுக்கும் எனக்கும் இனி அங்கென்னவேலை? நடந்து விட்டோம் அவர்களைத் தனித்து விட்டுவிட்டு! பிறகு அதற்கு மேல் செய்யவேண்டிய நடவடிக்கைகளைப் பற்றிச் சிந்தித்து ஒரு முடிவிற்கு வந்தோம்.

அந்த முடிவின்படி மறுநாளே பதிவாளர் முன்னிலையில் அழகியையும், வழுதியையும் நிறுத்தினேம். அவர்கள் மலர் மாற்றிக்கொண்டதை, புன்முறுவலால் தங்கள் அன்பை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டதைக் கண்டோம். தேன் உண்ட வண்டுபோல மயங்கினேம். அந்தத் திருமணத்திற்கு அக்கினி சாட்சி உண்டு...அதுதான் வீரமணி அடிக்கடி புகைத்துத் தள்ளிக்கொண்டிருந்த 'வில்ஸ் சிகரெட்'டின் நெருப்பு! வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத்துள் வைக்கப்படும் நிலை வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டவர்கள் சாட்சிகளானேம். அன்னு, வீரமணி, நான் ஆகிய மூவரும் சாட்சிக் கையொப்பமிட்டோம்! திருமணம் கைத்தட்டுவதுடன் வெற்றிகரமாக முடிந்து வெளியில் வரும்போது...என்ன சொல்லட்டும், போங்கள்...வள்ளி வண்டியிலே வந்திறங்கினுள்! மணமக்களுக்குத் தன் வாழ்த்துதலைத் தெரிவித்தாள். அவள் கண்களிலே நீர்வழிந்தது......ஆனந்தத்தாலா...... ஆத்திரத்தாலா......யார் அறிவார், பராபரமே!

8

அழகியையும், வழுதியையும் வழிகூட்டி அனுப்பும்போது அன்னு கொடுத்த மணப்பரிசு இந்தப் பொன்னுன வார்த்தைகள் தாம். "சொல்லளவின்றிச் செயலாற்றி இன்புறுக கொண்ட கொள்கைகளை!" இப்படிச் சொன்னதும் இருவருமே நன்றி தெரிவித்தனர். வண்டி நகர்ந்தது. அதே வண்டியில் வீரமணியும் கிளம்பிவிட்டான். நானும், அன்னுவும் தனியாக நடந்தோம்! மணமக்கள் இருவரும் தனித்தே செல்லட்டும் என்பதற்காகவே அடுத்த வண்டியில் செல்லலாம் என்று கூறி அன்னுவை நிறுத்திவிட்டேன்...... வழுதி மட்டும் சிரித்துக் கொண்டான். அவனுக்கு என் மனநிலை தெரியும்! ஆனுல் அவர்களின் நலத்திற்காகவே தங்கினேன் என்பது அவனுக்குத் தெரியாத செய்தியல்லவே! போய்க்கொண்டே இருந்தோம்.

அன்னுவுக்கும் எனக்குமிடையில் எத்தனை தடைகள்! எத்தனை சுவர்கள்! எத்தனைவிதமான உருவங்களில்! வள்ளிக்கும் வழுதிக்கும் இடையில் சாதிச்சுவர்—எனக்கும் அவளுக்கும் நடுவில் அகழ்சூழ்ந்த கோட்டைமதில். ஆம், மதமே எதிரிடையாக நிற்கிறதே! ஆனுல் இந்தத்தடை தாண்ட முடியாத ஒன்ருக எண்ணவேண்டாம். இந்து மதம் ஒரு மாட்டுத் தொழுவம்... எல்லா மாடுகளையும் கட்டிப்போட்டிருப்பதாக நினைப்பு—அறுத்துச் செல்லும் மாடுகளைப்பற்றி கவலைப்படுவதில்லை...புதிதாக வருவனவற்றைக் கட்ட முனைவதுமில்லை! ஆகவே மதத்தை விட்டுவிட முடியும்...இப்பொழுதும் மத எதிரி என்ற பட்டந்தானே! புதிதாக வரும் மக்கள் மின்சார ஓட்டம்—இந்து மதம் மரக்கட்டை. அதன் ஓட்டத்தை ஏற்பதில்லை. கிறித்துவ மதம் உலோகக் கம்பியைப்போல உடனே இழுத்துக்கொள்ளும்! அன்னுவை நான் அடைய வேண்டுமானுல் இந்தக்குறுக்கீடுகளை நொறுக்கித்தள்ள வேண்டும்.

இத்தோடு எதிர்ப்பு தன் சக்தியைச் சுருட்டி மடக்கிக் கொள்வதில்லை. பெற்ருேர் உருவில் தனது 'முஸ்தீபை' நடத்தும்! உற்ருரின் தூற்றுதல் உருவில் இருக்கும்! மணப் போட்டியாளனின் போராட்டம் வேறு! அன்னு ஏன் அருகில் தான் நடந்து வருகிருன். ஆனல் எவ்வளவு இடைவெளி யென்று அகக் கண்களால் தான் பார்க்க வேண்டும்!

மதமே மக்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை என்று கருதுபவன் நான்...... மதமே ஒழுக்கக் கேட்டின் ஊற்றுக்கண் என்று பேசுபவன் நான்...... மதம் மாறுவதா? அதுவும் என் சொந்த இன்ப இலாபத்திற்காக? முடியாது! கோட்டைகள் போலிருக்கும் கோவில்கள், சித்திரங்கள், சிற்பங்கள். பார்க்கக் கூட நுழையாத நான் 'சர்ச்சு'க்குள் புகுவதா? நெற்றியில் குறுக்கிலும், நெடுக்கிலும் சாம்பலாலும், சாந்தாலும் கோடிடும் முறையைக் கோணங்கித்தனம் எனக் கிண்டல் புரியும் நான் சிலுவைக் குறியை மட்டும் ஏற்பதா? தவிலையொலி எழுப்பி, சூட தீபங் காட்டிடும் தரகுக் கூட்டம் கூடாதென்று கூறும் நான் பாதிரியின் முன் நிற்பதா? முடியாது. மதமற்ற சமூகம் ஏற்பட பாடுபட வேண்டும் என்று எண்ணியுள்ள நான் மத மாற்றம், சுயநலத்திற்குச் சட்டை மாற்றுவது போல மதத்தை வேருக்கிக் கொள்வது வடித்தெடுத்த எத்துவாளித்தனம்!

மதம் என்ற குழப்ப இடத்திலிருந்து இருவருமே பிரயாணந் தொடங்க வேண்டும். இருவரும் ஒரு சந்திப்பில் ஒருவரையொருவர் பார்க்க முடியும்— அந்த இடத்திற்குப் பெயர் பகுத்தறிவுத் திருப்பம்—! அன்னு வருவாளா—என்னுல் முடியும்!

"அன்னு" என்றேன் ஆசைததும்ப.

"தோழரே" என்ருன் ஆயிரம் பொருள்கள் தொனிக்க.

"வழுதிக்கும் அழகிக்கும் வழிகாட்டி அனுப்பும் போது சொன்னயே அது யாருடைய பாடலின் அடி"

அவள் சிரித்தாள் விடை சொல்லாமல்.

"அன்னுவின் சொந்த வார்த்தைப் பின்னலா?"

"ஆமாம்........"

"அதன் பொருளாழத்தை நான் அறியலாமா?"

"வெளிப்படையானது தானே—விளக்க வேண்டியது எதுவுமில்லையே!"

"இருக்கிறது—அன்னு, அந்த வரியிலே வரும் 'கொண்ட கொள்கைகள்' என்னவென்று தெரியலாமா?"

"எதுவாகவும் இருக்கலாம்"

"இது உனக்குப் பாண்டியன் கேட்கும் நேரடியான கேள்வி. சுற்றிவளைக்காதே—சுருக்கமாக்கு விடையை!"

"............................"

"புரியவில்லையா? அன்னாவிற்குச் சொந்தக் குறிக்கோல்களும், கொள்கைகளும் உண்டல்லவா?"

"தாராளமாக!"

"அதிலே காதலுக்கு இடமுண்டா?"

"இதனை கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமா? பெண் மனம் என்ற சிலைக்குக் காதல் என்ற 'கலர்' கொடுத்திருக்கிறது இயற்கை"

இதற்குமேல் நான் எதைக் கேட்பது? அவள் விடை சொல்லும் போது அவள் கண்கள் உமிழ்ந்த ஒளிச்சிதறல்களுக்குப் பொருள் உண்டா? இல்லையா?—அவள் முகத்திலே கணத்திற்கு கணம் தோன்றி மறையும் வர்ண ஜாலங்களுக்கு விளக்கவுரை கிடையாதா? அப்படி கேள்விகளை அடுக்கும் போது என் கண்களை அவள் கண்கள் நேரடியாகச் சந்திக்க மறுக்கும் மாயம் என்ன?—யார் சொல்வார்கள்?

நேரடியாக அவளை நான் கேட்க மாட்டேன்—பயத்தால் அல்ல! என் நெஞ்சிலே காதலிக்கிற அளவு சக்தியிருக்கிறது. ஆனால் அதன் முறிவைத் தாங்க முடியாது. நான் கேட்டு அவள் வள்ளியின் விடையைத் தந்து என் மனம் உடைய முடியாது. என் உள்ளத்திலே அந்த எண்ணம் கிடந்து புழுங்கி அவியட்டும்—சமாதியாகட்டும்! பாண்டியன் பித்தனாகச் சுற்றி வர முடியாது—வரக்கூடாது! அவனைச் சமூகம் எதிர்பார்க்கிறது. பகுத்தறிவு உலகம் வரவேற்கிறது! அவனுக்கென்று சில பணிகளை ஒதுக்கி வைத்திருக்கிறது—அவைகளை அவன் செய்ய வேண்டும். முடிக்கா விட்டால் அவன் நாட்டுத் துரோகியாகி விடுகிறான்! ஆகவே அவன் ஏமாற்றத்தை விலைக்கு வாங்க வரக்கூடாது!—இப்படி என் மனம் போராடுகிறது. அடக்க மாட்டேன் என்று அடம் பிடிக்கிறது.

சமூகம் ஒரு கூண்டு—அன்னா அதிலே ஒரு கிளி. ஆம், அந்தக்கிளி பறந்துவரத் தயாரா?—அதன் முடிவு தெரியுமானால் உலகத்தையே எதிர்த்துப் போராட முடியும்! ஆனால் அஞ்சி அஞ்சிச் சாகும் பஞ்சவர்ணக் கிளியாக அவள் இருப்பாளானால் இருக்கட்டும்........ அவள் வகுக்கும் பாதைக்கு வெற்றியை அழைத்து விட்டாவது என் மனம் சாந்தியடையட்டும்!

O,3N11,K 43681
N53

அவள் வாழ, வாழ என் இதயம் வீங்கும் மகிழ்ச்சியால்........ உலகத்தின் எந்தக் கோடியில் அன்னு இருந்தாலும் என் இதயத்தில், அவள் இருக்கத்தான் போகிருள்........ அவளை விரட்டிவிட யாராலும் முடியாது! அன்னுவே முயன்றாலும் முடியாது! அவளிடம் அந்த வரத்தைக் கேட்டு வாங்கிக் கொள்வேன்! என் வாழ்விலே முதற் காதலும் அதுதான். கடைசிக் காதலும் அதுதான்—பிசிராந்தைக்கும் சோழனுக்கும் ஏற்பட்ட தோழமை போல மானசிக அன்பு! அன்னு என் லட்சிய சிலை—அவளைப் பார்க்க முடியாது.

"காதல் என்கிருயே அன்னு. காதல் என்ருல் என்ன? அழகியும், எழினியும் கொண்டார்களே, அதுவா? வழுதியும், அழகியும் இனித் தங்கள் மனத்திலே வளர்க்கப் போகிருர்களே, அதுவா?

முன்னது அவசரப் பருவத் திருப்தி........ பின்னது கடமையின் வெற்றி நடனம்!"

"இலக்கியத் தமிழிலே கூறுகிருய்; அன்னு எல்லோருக்கும் விளங்கும் முறையில் காதல் என்ருல் என்ன என்று சொல்லேன்"

"சொல்லட்டுமா........"

"ஆகா........"

"காதல். புருக்கூடு. அதில் ஒரு புரு பாண்டியன், இன்னெரு புரு... ..."

"யார்...... ?" என்று உணர்ச்சியில் கூவியே விட்டேன்!

"போகப் போகத் தெரியும்" என்ருள் அமைதியாக.

பிறகு அமைதி குடிகொண்டது. அருகிலிருந்த 'ஹிக்கின் பாதம்ஸ்' ஏட்டுக் கடையினருகில் சென்ரேம். அன்னு ஒவ்வொரு புத்தகமாகப் பார்த்தாள். ஒரு புத்தகத்தை விலை கொடுத்தே வாங்கி விட்டாள். புத்தகத்தின் பெயர் "கிளிக்கூண்டு......" அதன் மேலட்டையில் மூவர்ணத்தில் ஒரு கூண்டு அமைத்து அதில் ஒரு அழகிய கிளியிருப்பது போலவும் செய்திருந்தது. நான் கிளிக் கூண்டைப் பார்த்தேன். கிளியிருந்த இடத்தில் அன்னுவின் அழகு முகம் தெரிந்தது அன்னு கூண்டுக்கிளியா? சமூகக் கூட்டை உடைத்துப் பறப்பாளா....? திருமதி அன்னு-பாண்டியன் ஆவாளா?

★

105680

3A
3-103